PUBLIC LIBRARY
JAFFNA.
13 SEP 2009

விலை ரூபா 15.00 REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

13-09-2009 PAATHUKAVALAN

மலர்: 133 இதழ்: 17 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# "உண்மையான குணப்படுத்தலை அனுபவிக்க அன்பில் வேரூன்றிய ஆழமான விசுவாசம் தேவை"



## - தேவத்தையில் யாழ் ஆயர் -

ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்ற தேவத்தை தேவதாயின் திருத்தலப் பெருவிழாவில் ஆயர் இதனை தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் அதி வந்தனைக்குரிய மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தலைமையில் கடந்த ஞாயிறு அன்று நடை பெற்ற திருவிழாவில் யாழ் ஆயர் அதிவந். இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமிழில் மறையுரையாற்றினார்.

அவர் தமது மறையுரையில், போர் ஓய்ந்த நிலையில், தற்பொழுது எல்லா மக்களுக்கும் தேவைப்படுவது உள்ளார்ந்த குணப்படுத்தலே. 30 வருடப் போரால் ஏற்பட்ட காயங்கள் முதலில் ஆற்றப்பட வேண்டும். அன்பில் வேரூன்றிய ஆழமான விசுவாசத்தின் மூலமே இது சாத்தியமாகும்.


அன்னை மரியாளின் விசுவாசம் இறையன்பிலும், பிறரன்பிலும் வேரூன்றியதாக இருந்தது. அதே விசுவாசமே எம் உள்மனக் காயங்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டது. எனவே புரையோடிப் போயிருக்கும் எமது கசப்பான கடந்த கால பதிவுகளை மறந்து அன்னையின் அடிச்சுவட்டில் எம் வாழ்வை அமைத்து உண்மையான, உள்ளார்ந்த ஆத்துமார்ந்த அமைதியை அனுபவிப்போம்" என்றார்.

## தனித்தன்மையாய் வாழ்ந்து மறைந்த தந்தை

அருட்பணியாளர் மரியாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை அ.ம.தி அவர்கள் 1921ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 19ம் நாள் சில்லையூரிலே மரியாம்பிள்ளை மாசெலா தம்பதியினரின் புதல்வனாகப் பிறந்தார்.

அருட்பணியாளர் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை சில்லையூரிலும், மாதகலிலும் கற்று தன் தொடர்கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார்.

இறைவனின் அழைப்பின் குரல் கேட்டுக் குருவாக வரவிரும்பிய இவர் சிறியகுருமடம் இணைந்தார். அமலமரியின் மேல் கொண்ட அன்பினால் அமலமரித்தியாகியாக வர விரும்பிய இவர், பம்பலப்பிட்டியிலுள்ள அமல



மரித்தியாகிகளின் நவசந்நியாச குருமடம் இணைந்து தனது முதலாவது வாக்குத்தத்தத்தை 1946ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 8ம் நாள மேற்கொண்டார். தனது இறுதி அர்ப்பணத்தை 1949ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் மேற்கொண்டார். இவர் தனது மெய்யியல், இறையியல் படிப்புக்களை உரோமாபுரியிலும் மேற்கொண்டு குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

அருட்பணியாளர் பாவிலுப்பிள்ளை அ.ம.தி அவர்கள் யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் பணியாற்றியுள்ளார். குருவாக இளவாலை, புதுக்குடியிருப்பு, அரிப்பு, முருங்கன், வசாவிளான் போன்ற பங்குகள் இவரின் பணியின் சிறப்புத்தன்மையை இப்போதும் கூறிநிற்கிறது.


அருட்பணியாளர் பாவிலுப்பிள்ளை அ.ம.தி அவர்களுக்கு புரட்டாதித்திங்கள் 8ம் நாள் ஓர் சிறப்புப் பொருந்திய நாளாக அமைந்துவிட்டது. தனது முதல் அர்ப்பணம்,மற்றும் நித்திய அர்ப்பணம் என்பவற்றை அன்னை மரியாள் பிறந்த தினமாகிய புரட்டாதித்திங்கள் 8ல் மேற்கொண்ட இறைவனின் உன்னதக்குருவாகிய இந்தக்குருவை இறைவன் அதே நாளில் (08.09.2009) தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

**யே.ஜெறால்ட் அ.ம.தி.**

## முத்திப்பேறு பட்ட சிபாரிசுக்காக புள்டன் ஷீனின் பெயர் (Fulton Sheen)

ஆயர் ஜோசவ் பி. மகுய்றே (Joseph F. Maguire) என்பவர், பேராயர் புள்டன் யோண் ஷீனின் முத்திப் பேறுபட்டத்திற்கு பொறுப்பான திருத்தந்தையின் ஆலோசனை சபையில் இணைந்துள்ளதாக பேராயர் புள்டன் ஷீன் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆயர் மகுய்றே, சுற்றியுள்ள ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஆயர்களோடு இணைந்து, இந்த முத்திப்பேறு நிகழ்வுக்கு தனது ஆதரவை வழங்குகிறார். பேராயர் புள்டன் ஷீன் சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற ஒரு நற்செய்தி அறிவிப்பாளர், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களின் மூலம் நன்கு அறியப்பட்டவர்; சிறந்த எழுத்தாளர்; மற்றும் அர்ப்பணமுள்ள மறைத்தூதுரைப் பணியாளர். 2002ம் ஆண்டு இவரின் முத்திப்பேறு மற்றும் புனித பட்டத்துக்குமான காரணங்கள்



பேராயரின் பிறப்பிடமான பியோறியா மறைமாவட்டத்தில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

புள்டன் ஷீன் ஸ்தாபனமே பேராயரின் முத்திப்பேறுபட்டத்திற்கான உத்தியோக பூர்வ ஊக்குவிப்பாளராகவுள்ளது.

## அன்னை திரேசாவின் 100வது பிறந்தநாளைக் கொண்டாட ஆயத்தமாகும் சபைக் கன்னியர்கள்



மறைந்த அன்னை திரேசாவின் 100வது பிறந்தநாள் 2010ம் ஆண்டு கொண்டாடப்படவுள்ளது. அதற்கு ஆயததமாக இவ்வாண்டு முதல் நூறாண்டு நிகழ்ச்சித் திட்டத்தை அச்சபைக் கன்னியர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 26ம் திகதி திருப்பலி ஒன்றில், ''அன்னை திரேசாவின் 100வது பிறந்த நாள் இன்று ஆரம்பமாகிறது" என்றார் கொல்கொத்தாவின் இளைப்பாறிய பேராயர் கென்றி டி சைசா.

## பொன்விழாக் காணும் குருநகர் ஆவே மரியா பாலர் பாடசாலை

குருநகரின் மத்தியில் 1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆவே மரியா பாலர் பாடசாலை தனது 50வது ஆண்டு பொன்விழாவை இவ்வாண்டு சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தது. குருநகரின் கல்வி ஊட்டல் பணியை மிகச் சிறப்பாக ஆற்றி வரும் இப்பாலர் பாடசாலை அருட்சகோதரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவ மழலைகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்களின் கல்விப்பணி மேலும் சிறக்க காவலனின வாழ்த்துக்கள்.

## கல்விப் பணியில் கரைந்து மறைந்த அருட்சகோதரி கனிசியஸ் பிலிப்புபிள்ளை H.F.



இறையழைத்தலின் விளைநிலமாய் காலங்களுடே நின்று திருச்சபைத் தோட்டத்திற்குப் பணியாளர்களைத் தாராளமாய்த் தந்துவரும் சமூகங்களுக்குள்ளே நானாட்டான் கிறிஸ்தவ சமூகம் குறிப்பிடத்தக்கது. அங்கே 14.04.1949ல் பிறந்தவர்தான் அருட்சகோதரி கனிசியஸ் பிலிப்புபிள்ளை H.F. அவர்கள்.

08.09.1969ல் திருக்குடும்ப கன்னியர் சபையில் தனது முதலாவது வார்த்தைப்பாட்டை எடுத்துக் கொண்ட அருட்சகோதரி அவர்கள், தனது பணிவாழ்வு முழுவதையும் கல்விப் பணியில் அர்ப்பணித்துள்ளார். 1969 - 1970 வரை மாதகலிலும், 1971 - 1972 வரை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விப் பணியாற்றினார். பின்னர் 1973 - 1974 வரைஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றார். அதன் பின்னர் **(8ம் பக்கம் பார்க்க...)**

## வடமாகாணத்தில் சிறந்த துடுப்பாட்ட அணியான பத்திரிசியார் கல்லூரி அணிக்கு இரு பெரும் விருதுகள்

**கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் வழங்கப்பட்டன**





வடமாகாணப் பாடசாலை மட்ட கிரிக்கெட் அணிகளுள், கடந்த ஆண்டு மிகச் சிறப்பாகச் செயற்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரியின் கிறிக்கெட் அணியினர், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திற்கு அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். The Sunday Times, Bata Company ஆகியவை இணைந்து ஒரு விருதும The Sunday Observer , Mobital **(8ம் பக்கம் பார்க்..)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## அன்னை என் தெய்வம்

நான் பிறக்கையிலே
வலி சுமந்தாள்
எனை வளர்க்கையிலே
சுகம் துளிர்த்தாள்!

எனக்கு சுவை பார்த்து
உணவளிப்பாள் அவள்
பத்தியம் காத்து
பசியிருப்பாள்...!

நல்லவை சொல்லியே
நடை பயில வைத்தாள்
நாலுபேர் போற்றவே
நாளும் விழித்தாள்!

நீதியும் சொல்லியே
வேற்றுமை ஒழிப்பாள்
வேதனையிலும்
இன்முகம் கொண்டு சிரிப்பாள்..!
இவளே என் அன்னை
அவளே என் தெய்வம்!

எப்படி வாழ்த்துவேன்
நான் இவளை
அகராதி புரட்டியும் எனக்கோர்
வார்த்தை கிட்ட வில்லையே...?
நான் எப்படி வாழ்த்துவேன்...?

பிரியா
புனித பாஸ்டர் ஆலயம், குருநகர்

## சில்லையூரைக் காக்கும் கதிரைத்தாயே

சீர்போற்றும் எம் மண்ணை பார்போற்ற வைத்திடவே
கிறிஸ்தவச் செறிவினால் சின்னரோமைப் பெயர் பெற்று
அனைத்து வளங்களையும் அள்ளியே இறைத்து
எம் மண்ணைக் காக்கும் கதிரைத்தாயே வாழ்க

ஆசனத்தில் அமர்ந்து இறைவனைக் கரங்களில் ஏந்தியே
நிறைவுடனே அருள்பாலித்திடும் எம்மண்ணின் தாயே
நானூறு ஆண்டுகால வரலாறு சுமந்திடும் எம்மண்ணை
நாளுமே காத்திடும் கதிரைத்தாயே வாழ்க

மருத்து மாதா, ஆரோக்கிய மாதா, கதிரைமாதா
எனப்பல பெயர்கள் பெற்று
வெஞ்சியக்குருவின் ஆலயத்தில் அமர்ந்து
ஐம்பதாண்டு நிறைவும் கண்டாய் தாயே

இன்று நாம் உன்னை வாயாரப்பாடி
உள்ளக்கிடக்கையை உன் பதம் சிந்துகிறோம்
பரலோக அன்னையே கேட்டிடும் எம் விண்ணப்பம்
கதிரைத்தாயே காத்திடும் எம் மண்ணை நாளும் குறைவின்றி

அ. திருசன், சில்லாலை.

## முயற்சி

அலை அலையாய் துன்பங்கள்
அடுத்து அடுத்து வந்தாலும்
மலையைப் போல உறுதியுடன்
மண்ணில் வாழப் பழகுவோம்

கடமை தன்னைக் கண்ணைக்
கருதி என்றும் உழைத்திட்டால்
கற்றைப்போல விரைவாகக்
கவலைகள் யாவும் மறைந்துவிடும்

முயற்சி என்றும் உயர்ச்சி தரும்
முன்னோர் சொன்ன மொழியிதுவே
முயற்சி கொண்டு உழைத்திடுவோம்
முன்னேற்றத்தை நாடிடுவோம்.

தி. அன்ரோ
புனித பாஸ்டர் ஆலயம், இளவாலை.

## வதைமுகாமில் ஓர்குரல்...

அமைத்துயரத்துடன்
அகதிகளாய் ஓடிவந்து
அமுதலின் அடிப்படையில்
அலைவுறும் ஆதாரங்களின்
அவலங்கள் கேளீர்

தேடி வரும் உறவுகளின்
தேடுதலின் முதலீட்டை
முட்கம்பி முகாங்களில்
முழுசாய்க் காணமுடியாமல்
தெரு நாய்கள் போல
தடைக்கம்பிக்குள்
நடைபயிலும் முகாங்களில்
ஏற்படும் துரும்புகள்
ஏராளம்! ஏராளம்!

கூரை இருக்க
குடிநீர் குடிக்க
குடியிருப்பிடம் எது?
நின்றுதின்னும்
ஈப்பதில்லாத உணவாவது
நீக்க மாட்டேன் உன்னுடன்
என்று நிலைதில விழுகிறது

வளர்ந்து பால் எதிர்க்கூறன்
வேறுவகைகள் இன்றி
வெறுமையாய் சிறிது அவதிப்படுவ

படுக்கப் பாய் இல்லாவிட்டாலும்
கண்கள் ஓய்வு தேடுமன்
கண்மூடிப்பட வைத்துவிடும்
தன்கருக்குள் உறவுகளின் துயரம்
உடலோரமுடன் தொற்றுநோயும்
தொற்றிக் கொள்ள
விரைவாய் முன்னாக
முடிந்துவிடும் ஜீவன்களும்
ஏராளம்! ஏராளம்!

வன்னியின் மரணத்தைவிட
வதைமுகாம்களின் மரணம்
குவியலான போல சரிச் செல்கிறது
வாழ்க்கைப்படி வழுக்கி தலைமுறைத் தொடுகிறது
இன்று இருப்பார்
நாளை இல்லை
நாளை இருப்பார்
எப்போ இறப்பாரோ
தெரியவில்லை
ஒவ்வொரு நாளும்
அமுறுப்படுத்தும்
உயிரற்ற உடல்கள்
ஏராளம்! ஏராளம்!

இதற்கு முடிவு நாள் எது?
விடிவுநாள் எது?
மரணத்தின் மூலம் முகாம்கள்
வெறுமையாக்கப்படுமோ? அல்லது
மக்களின் மூலம் மறுவாழ்வு வருமா?

அ. தாஜி
பூலனூர், அச்செழு.

## பணம்

பணம் இருந்தால்
உன்னை உனக்குத்தெரியாது!
பணம் இல்லாவிட்டால்
உன்னை எவருக்கும் தெரியாது!
பணத்திடம் நம்பிக்கை வைக்காதே!
நம்பிக்கையிடம் பணத்தை வை!

லூட்சா, குருநகர்

# மண்ணகப் பூ ஒன்று விண்ணிலே விரிகின்றது

**இறையியல் பேராசிரியர் தே. அல்போன்சு**
**தூய பவுல் கல்லூரி, திருச்சி.**

### முன்னுரை

1950ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பயஸ் மரியாவின் விண்ணேற்பை நம்பிக்கைக் கோட்பாடாக அறிக்கையிட்டார். "இறைவனின் மாசில்லா அன்னையும் என்றும் கன்னியுமான மரியா நமது இவ்வுலக வாழ்க்கைப் பயணம் முடிவுற்றதும் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிமைக்கு எடுத்துச் செல்லப் பட்டார்" என்பதே அவர் வரையறுத்து அறிவித்த கோட்பாடு.

இந்த அறிக்கையின் வழியாக பல நூற்றாண்டுகளாக மரியா பக்தர்கள் மனதிலே வளர்த்திருந்த விருப்பமும் அவர்கள் பல்லாயிரமாகத் திருத்தந்தைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பங்களும் திருத்தந்தையால் நிறைவேற்றப்பட்டன. மரியா பக்தர்களுக்கு மட்டும் அல்ல கத்தோலிக்க சமூகத்தினருள் மிகப் பெரும்பான்மையானவர்களுக்கு இந்த அறிக்கை பெரும் மகிழ்ச்சியையே அளித்தது. ஆனால் சிறிதளவு சபையினரிடமோ இதற்கு எதிர்ப்பே பரவலாக இருந்தது. "உரோமன் கத்தோலிக்க சபையின் இந்த முடிவு எவ்வளவு பேரழிவானதும் கிறிஸ்துவின் உடலின் உறுப்பினர்களாகிய எங்களுக்கு எவ்வளவு வேதனை அளிப்பதுமாக இருக்கிறது என்றால் நற்செய்தி - லூத்தரன் சபையின் ஆயர்களாகிய நாங்கள் இதைக் கண்டு மௌனமாக இருக்க முடியாது" என ஜெர்மனி நாட்டு லூத்தரன் சபை ஆயர்கள் வெளிப்படையாகவே தங்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அன்றைய முற்போக்கு கத்தோலிக்க இறையியலாளர் சிலர்கூட மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் தங்கள் மகிழ்ச்சியின்மைபற்றி மௌனம் காத்தனர்.

### முன்மாதிரிச் சீடருக்குத்தானே முதல் மரியாதை!

மரியா மாபெரும் நம்பிக்கையாளர். வானவரின் வாழ்த்துரையைக் கேட்டு "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என இறை வார்த்தையை நம்பி அவருக்குத் தம்மையே அர்ப்பணித்தவர். இதனால் "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக் 1:45) என எலிசபெத்தால் வாழ்த்துப் பெற்றவர். இயேசுவைப் பெற்றெடுத்து, பேணி வளர்த்து, ஆளாக்கிவிட்ட அருஞ்செயலைவிட அதிக பேறுடையதாக மரியாவை ஆக்கியது அவர் இறைவார்த்தையைக் கேட்டு கடைப்பிடித்ததே என்பதை இயேசுவும் உணர்த்துகிறார் (காண் லூக் 11:27-28).

மரியா இயேசுவின் முன்மாதிரிச் சீடரும் ஆவார். இயேசு தம் இறையாட்சிப் பணியைத் தொடங்கியபோது ஒருவேளை மரியா அவரை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம் (காண் லூக் 2:50; மாற் 3:21-22; 31-35). இருப்பினும் மரியா தம் மகன்மீது கொண்டிருந்த நம்பிக்கையைக் கானாவூர் திருமண விருந்தில் இரசம் தீர்ந்துவிட தண்ணீரை திராட்சை மதுவாக மாற்றும் முதல் அருங்குறியை இயேசு செய்ய மரியா தூண்டுதல் தந்தது தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்துகிறது (காண் யோவா 2:1-11). இயேசு சிலுவையில் உயிர் துறக்கும்போது அவருடன் மரியா உடனிருந்ததும் அவரது ஒப்புயர்வற்ற நம்பிக்கையின் வெளிப்பாடே. அதைத் திலும் மேலாக, இயேசுவின் விண்ணேற்றத் திற்குப் பின்பு தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருந்து, மன்றாடிக்கொண்டிருந்த முதல் திருச்சபையாகிய திருத்தூதர் குழுமத்தின் முன்னணி உறுப்பினராக மரியா இருப்பது (திப 1:14) அவர் இயேசுவின் முன்மாதிரிச் சீடர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு முழுமையான நம்பிக்கையால் இயேசுவுடன் ஒன்றுபட்டு, அவருடைய பாடுகளில் முழுமையாகப் பங்குபெற்ற மரியா அவருடைய உயிர்ப்பு - விண்ணேற்றத்தின் மாட்சிமையிலும் நிறைவாகப் பங்குபெறுவது இயல்பானதுதானே. அதுவே மரியாவின் விண்ணேற்பு. ஆம், உயிர்த்த இயேசுவுடன் முழுமையாக ஒன்றுபட்டு அவர் வழியாக நம்மோடும் அவர் ஒன்றுபட்டிருக்கும் பேரன்பு அல்லது உயிரளிக்கும் உறவு நிலையே மரியாவின் விண்ணேற்பு.

மரியாவின் விண்ணேற்பு இயேசுவின் உயிர்ப்பு - விண்ணேற்றத்தின் மாட்சிமையில் முழுமையான பங்கேற்பு என்றால் அதனை நாம் மண்ணக அரசர், அரசிகளது மாட்சிமையின் பாணியில் சிந்திப்பதோ சித்திரிப்பதோ சரியன்று. ஏனெனில் மண்ணக அரசர் - அரசிகள் பொதுவாக ஆதிக்கவாதிகள். ஏழை மக்களைச் சுரண்டி தாங்கள் மாளிகைகளில் பட்டுடுத்தி, பல்சுவை உணவு உண்டு, பகட்டான ஆடம்பரங்கள் அணிகலன்களுடன் சுகவாழ்வு வாழ்ந்ததையே மாட்சிமை எனக் கருதியவர்கள். அதே பாணியில் மரியாவின் திரு உருவங்களுக்கு மணிமுடி சூட்டி, தங்க - வைர நகைகள் அணிவித்து, பட்டாடை கட்டி, தங்கத்தேர்களில் பவனியாகக் கொண்டு வருவதே அவரது உண்மையான மாட்சிமை என நாம் எண்ணிவிடல் ஆகாது. மாறாக, உயிர்த்த இயேசுவைப் பற்றிப் பேசும்போது, தூய பவுலும் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார் "கடைசி ஆதாமோ உயிர் தரும் தூய ஆவியார்" (1கொரி 15:45). ஆம் எல்லாரும் நிறைவாக வாழ்வு பெறுவதே இயேசுவின் மாட்சிமை. புனித இரேனியுஸ் கூறுவதுபோல் "முழுமையாக வாழும் மனிதரே கடவுளின் மகிமை" இயேசுவுடன் இணைந்து, தாம் மண்ணக வாழ்வில் கொண்டிருந்த அர்ப்பண நம்பிக்கையின் முன்மாதிரியாலும் தொடர்ந்து ஆற்றும் விண்ணக அருளுதவிகளாலும் நம்மை உண்மை மனிதர்களாக, இயேசுவின் சிறந்த சீடர்களாக வாழச் செய்வதே மரியாவின் மாட்சிமை.

### உண்மை உலகியலே உயர் தெய்வீகம்

முன்மாதிரி நம்பிக்கையாளர் என்பதால் மரியா பெற்ற இந்த விண்ணேற்பின் மாட்சிமை நம்பிக்கையாளர்கள் நாம் பெற்றிருக்கும் அழைப்பு அடையவிருக்கின்ற நிறைவு என்பவை பற்றிய பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. மரியாபோல் இறை அன்பிலும் பிறர் அர்ப்பணத்திலும் நமது நம்பிக்கையை நாமும் வாழ்வாக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்படி வாழ்ந்தால் நாமும் அவரைப்போல் விண்ணகப் பேரின்பத்தின் மாட்சிமையை அடைவோம் எனும் உறுதிப்பாட்டையும் மரியாவின் விண்ணேற்பு நமக்குத் தருகின்றது.

மரியா இந்த மண்ணின் மகள், உலக மாந்தர்களில் ஒருவர். உலகிலே பிறந்து வளர்ந்தவர். உலகிய ஈடுபாடுகளைக் கொண்டிருந்தவர். கணவனை அன்பு செய்த நல்ல மனைவியாக, பிள்ளையைப் பெற்றெடுத்துப் பேணிவளர்த்து இளைஞனாக வளர்த்துவிட்ட தாயாக, ஏழைக் குடும்பத்தை தம் உழைப்பாலும் பொறுப்பாலும் சீராக நடத்திய நல்ல குடும்பத் தலைவியாக, பேறுகாலத்தில் இருந்த எலிசபெத்து, இரசமும் இன்றி தவித்த கானாவூர் திருமணக் குடும்பம் என்போருக்கு தேவை அறிந்து உதவும் நல்ல உறவினராக, செருக்கும் ஆதிக்கமும் நீங்கி மக்கள் சமத்துவ உறவோடும் மகிழ்வோடும் வாழும் நல்லதோர் உலகை கனவு கண்ட புதிய சமூக ஆர்வலராக அந்த இறையாட்சிக் கனவை தம் மகனின் நெஞ்சிலே இலட்சிய நெருப்பாக ஏற்றிவைத்த வீர நங்கையாக, அவரது இறப்பு - உயிர்ப்புக்குப் பின்பும் அவருடைய சீடர்கள் அவரது இறையாட்சிப் பணியைத் தொடர ஊக்கம் தந்த தலைமைத்துவ பெண்ணாக மரியா வாழ்ந்த உண்மையான உலகிய வாழ்வே உயரிய தெய்வீக வாழ்வு எனக் காட்டுவதே அவரது விண்ணேற்பு. ஆம், உண்மையான உலகியமே உயர் தெய்வீகம். இவ்வுலகை அன்பும் நீதியும் பொங்கும் இறை உலகம் ஆக்குதல் தன் வழியாகத்தான் நாமும் விண்ணக வீடு பேறு அடைகிறோம்.

### உடலைக் கொண்டாடுவோம்

மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணேற்பு அடைந்தார் எனும் நம்பிக்கை உடலைப் பேணுவது உண்மை ஆன்மீகத்தின் இன்றியமையாத ஒரு கூறு எனும் முக்கிய ஒரு செய்தியையும் நமக்கு உணர்த்துகின்றது. ஆம், உடல் என்பது ஆன்மாவின் எதிரியோ அதற்கு பகையானதோ அல்ல. மாறாக, உடல் இன்றி மனித ஆன்மா இயங்கவோ செயல்படவோ உறவுகொள்ளவோ இயலாது. மனிதரின் அகத்தன்மையே ஆன்மா, புறத்தன்மையே உடல். எனவே வீடு என்பது முழு மனித நலமே, நிறைவான வாழ்வே. எனவே உடலே மனிதம் எனக் கருதி ஆன்மாவை மறந்துவிடுவதோ, அல்லது ஆன்மாவே மனிதம் எனக் கருதி உடலைப் புறக்கணிப்பதோ முழுமனித ஆன்மீகம் அல்ல. விண்ணக மாட்சிமையில் உயிர்த்த நம் உடலும் பங்குபெறவிருக்கிறது. எனவே உடல்நலம் பேணல், உடற்பயிற்சி செய்தல், விளையாட்டுகள், சுத்தம் - சுகாதாரம் காத்தல் என்பவையும் ஆன்மீகத்தின் இயல்பான, இன்றியமையாத கூறுகளே. அவை இல்லாத ஆன்மீகம் ஊனமுற்றதே அன்றி உண்மையானதோ, முழுமையானதோ அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

## பொதுக்காலம் 24 ஆம் வாரம்

### கிறிஸ்து இயேசு எனக்கு யார்?

''சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள்''

நாம் வாழும் இப்பூமியானது அதிகமாக வெப்பமாகிக் கொண்டு வருகின்றது என்று தற்போதைய விஞ்ஞானிகள் கண்டு பிடித்து இருக்கின்றனர். இதனால் பனிப்பாறைகள் உருகி வருவதனால் உலகினை சூழ்ந்துள்ள நீரின் அளவு அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கின்றது என்றும் இவ்வாறு இந்த நிலை தொடர்ந்தால் மீண்டும் பல்வேறுபட்ட அழிவுகள் இடம் பெறலாம் என்றும் உலக மக்களை உலக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இந்தப் பிரபஞ்சத்தின் மிகவும் உயர்ந்த ''சுமைதாங்கி'' உலகம்தான். ஏனென்றால் உலகில் உள்ள அத்தனையையும் முணு முணுப்பேதுமின்றி தாங்குவது உலகுதான் என்று கூறினாலும், அந்த சுமைதாங்கும் நிலை மாறிவருவதனை நாம் அவதானிக்கலாம். அதன் வெளிப்பாடு கள்தான் பல்வேறான இயற்கை அனர்த்தங்கள்.

ஆனால் இன்றுவரை மனிதரை அவர்களுடைய பாவங்களை அவர்களுடைய ரணமாகிவிட்ட சோகங்களை, இனம் புரியாக் கண்ணீர்களை அலுக்காமல் சலிக்காமல் செவிகொடுத்துக் கேட்பதும், என்ன பெரிய பாவச் சுமையானாலும் மன்னித்து ஏற்பதும், சோர்ந்த வேளையிலே உணவாக, பானமாக ஆகி இளைப்பாறுதல் ''இயேசு ஆண்டவர் ஒருவரே''! இந்த அன்பு ஆண்டவரின் துன்புறும் நிகழ்வை எசாயா இறைவாக்கினர் அறிவிப்பதை இவ்வார முதல் வாசகத்தில் நாம் வாசிக்கின்றோம். மானிடர் ஒவ்வொருவருக்காகவும் இறைமகன் இயேசு அனுபவிக்கப் போகின்ற பொல்லாத பாடுகளை சித்தரிக்கின்றது இவ் வாசகம்.

அதுபோலவே உண்மையிலேயே நாம் அனைவரும் கிறிஸ்துவை நம்பி ஏற்றுக் கொண்டு விசுவசிப்போர் என்று சொன்னால் அந்த விசுவாசத்தினை எமது நாளாந்த செயலில் காட்டவும், செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசத்திற்கு ஒப்பானது என்று இரண்டாம் வாசகத்தில் புனித யாக்கோபு (யாகப்பர்) வெளிப்படக்கூற கிறிஸ்துவர் அனை வருக்கும் புதிய அறைகூவல் விடுக்கின்றார்.

இன்றும் நற்செய்திப் பொழிவானது இயேசு ஆண்டவரை யாரென்று எங்கள் ஒவ் வொருவரிடமும் கேட்டுநிற்கின்றது. இயேசு வோடு கூடவே இருந்து அவரது புதுமைகள், வல்ல செயல்கள் அனைத்தையும் அனு பவித்த புனித இராயப்பரால் அவரை ''மெசியா'' என ஏற்றுக் கொள்ள முடிகின்றது ஆனால் அதே இராயப்பர் ஆண்டவர் தனது பாடுகளை முன்னறிவிக்கும் போது ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

நற்செய்தியில் நாம் காணும் புனித இரா யப்பர் மானிடர் அனைவரதும் பிரதிபலிப்பாக தெரிகின்றார். ஆம் அன்பார்ந்தவர்களே. இறை வனிடம் இருந்து அருளுக்கு மேல் அருளைப் பெறுகின்ற நாம் ஒவ்வொருவரும், அதே அரு ளாற்றில் இருந்து வருகின்ற துன்பங்கள், சோதனைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின் றோம். சிறிய தோல்விகளுக்கும், நினைத்தவை நடக்கவில்லையென்றாலும் எமது விசுவா சத்தில் தடுக்கி, தடம் மாறிப் போகின்றோம். இவ்வாறு விசுவாசக் குறைவோடு இருக்கும் ஒவ்வொருவரிடமும் இந்த வாரம் முழுவதும் இயேசு கேட்கும் கேள்வி இதுதான் ''நான் உனக்கு யார்? என் சகோதரனே சகோதரியே!'' ''நீ என்னை எவ்வாறு இனம் காணுகின்றாய்''?!

முதுமையிலே தனிமையில் முடங்கி விட்ட ஏழையில் எனைக் காண்கின்றாயா?

நாளும் பொழுதும் நீ நலமாக இருக்க வேண்டும் என தனது சுகத்தை இழக்கும், விவசாயின் வேர்வையில், தச்சுத் தொழி லாளியில், மீனவச் சகோதரனில், நீ எனைச் சந்திக்கின்றாயா?

உன்னையும் உனது சுற்றுப்புறத்தையும் வெளிச்சமாக்க விறகாக செயல்படும் மின் சார நிலைய ஊழியனில் எனைக் காண் கின்றாயா?

நீ அழகாக தேனீர் அருந்த, ஆடை அணிய, உணவு உட்கொள்ள உனக்காக உழைத்து அடிப்படை வசதிகள் இல்லாத தேயிலை தோட்டத்து தொழிலாளர், வெதுப் பகங்களில் எனைச் சந்திக்கின்றாயா?

முடிந்துபோய்விட்டது என்று சொல்லப் படும் யுத்தத்தின் முடியாத முகாரியாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருக்கும் உனது அருமை சகோதர சகோதரிகளின் விடுதலை நோக்கிய விரக்திப் பார்வைகளில் நீ என்னைக் காண்கின்றாயா?

அன்பனே, என் சகோதரியே, சகோ தரனே நான் உனக்கு யார்?

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

## பொதுக்காலம் 25 ஆம் வாரம்

### உண்மையான தலைவன்

''அறிவிலியே இன்றிரவே உனது உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும் அப்போது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?'' (லூக்கா 12:20)

ஆசை போடுகின்ற பாதைகளில் அசை யாமல் நடக்க முயற்சி செய்து கொண்டிருப் பதுதான் மனித வாழ்க்கையில் நாம் எல் லோரும் காணுகின்ற ''பலகீனப் பலப் பரீட்சை'' பாதையில் நடந்து செல்லுகின்ற ஏழையொருவன் பத்து ரூபா கண்டு எடுத்து விட்டால் அந்த பாதை முழுவதும் பணமாகவே கிடக்கக் கூடாதா? என நினைத்து பாதையை கவனமாக கண்களால் துளாவிக் கொண்டு நடக்கின்றான். இதேபோலவே அதிகார ஆசையும், பண வெறியும் இந்த உலகின் பல்வேறு சாம்ராஜ்ஜியங்கள் உருவாகவும், அதே சாம்ராஜ்ஜியங்கள் ஆணவத்தினால் அழிந்ததையும் எத்தனையோ உண்மைப் பாத்திரங்கள் கூறிநின்றாலும், மனிதனை பேராசை துரத்திக் கொண்டு இருப்பதைக் காணலாம்.

கூலியாள் முதலாளியாகவும்
தொண்டன் தலைவனாகவும்
தலைவனாகியவன் ஒரு நாட்டை
ஆளவும் நாட்டை ஆள்பவன்
உலகை ஆளவும் முயற்சி

செய்ததனால்தான் பல உலக யுத்தங்கள் உருவாகி அதன் எச்சங்களாகிய போரும் வன்முறையும், அடக்கு முறைகளும் இன்று வரை உலகை ஆட்டிப்படைக்கின்றன. ஆனால் இன்றைய வாசகங்கள் குறிப்பிடும் தலை மைத்துவமானது உலக ரீதியான தலைமைத் துவத்திற்கு அப்பாற்பட்டு எதையும் தாங்கிக் கொள்ளும் ஞானத்தின் தலைமைத்துவமாக, பொறாமை, காழ்ப்புணர்வு இல்லாத சமாதான நோக்குடனான தலைமைத்துவமாகவும், எல் லோரையும் மனிதர்கள் என்ற ரீதியில் சம மாக அன்பு செய்யும் குழந்தைக்கு உரிய குணங்களைக் கொண்ட தாழ்ச்சியின் தலை மைத்துவமாகவும் இருக்க வேண்டும் என்று இன்றைய வாரத்தின் திருவாசகங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன.

தலைவனாக இருக்க விரும்புபவன் முதலில் தொண்டனாக இருக்கட்டும் என்றும் வாக்கிற்கேற்ப இயேசு ஆண்டவர் தனது புது மைகளால், பேராற்றல் நிறை போதனையால், 'ரபி, மெசியா' என அழைக்கப்பட்டாலும் தனது சீடர்களின் பாதங்களை பணிந்து கழுவி (யோவான் 13) இறுதியில் எல்லோருக் காகவும் தமது ஆவியைத் துறந்து உண் மையான தலைமைத்துவத்தின் அழியாத வழிகாட்டியாகவும் எம் எல்லோரினதும் ஆண் டவராகவும், ஆன்மீக அரசராகவும் அரசாட்சி செய்கின்றார்.

பதவி ஆசை என்பது ஒரு ''போதை'' இந்த ஆசைக்கு ஆட்பட்ட மனிதன் தவறுக்கு மேல் தவறுகள் செய்ய முயற்சி செய்து தனது வாழ்க்கையை அழித்துக் கொள் கின்றான். ஆனால் தலைவர்கள் எல் லோருமே அப்படிப்பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. இந்த உலகில் வாழும் மனிதர் களுக்கு எல்லாம் உதாரண புருஷர்களாக வாழ்ந்து மடிந்த எத்தனையோ தலைவர் களை இந்த உலகம் கண்டுள்ளது.

எல்லாத் தலைவர்களுக்கும் சிகரமாக தனது மக்களுக்காக உயிர் உடல் ஆன் மாவை கையளித்து இறுதிநாள்வரை உங்க ளோடு இருப்பேன் என உறுதி கூறி இரவுபகல் எண்பாராது எமக்காக நற்கருணையில் வீற்றி ருக்கும் இயேசு ஆண்டவர் ஒருவரே தலை வர்களுக்கெல்லாம் தலைவர், ஆண்ட வர்க்கெல்லாம் ஆண்டவர், அரசர்க்கெல்லாம் அரசர்.

''என்னிடம் இருந்து கற்றுக் கொள் ளுங்கள் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்.''

# மாணவர் பக்கம்

அருட்பணி மா. ரேஜினல் இராசநாயகம்

## எமது வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | இயேசுக்கிறிஸ்து |
| பிறந்த முகவரி | : | பெத்லகேம் |
| தற்போதைய முகவரி | : | உலக முடிவுவரை உங்களுடன் இருக்கிறேன் |
| தொலைபேசி | : | உரோ. 10:13 |
| மின்னஞ்சல் | : | இயேசுக்கிறிஸ்து @ kneemail.com |
| இணையத்தளம் | : | www. பைபிள்.com |
| முக்கிய சொற்கள் | : | எல்லாம் வல்லவர், அளவற்ற அன்புள்ளவர், நிபந்தனையில்லாமல் மன்னிப்பவர். |
| வயது | : | 33 |
| தொழில் | : | இறையரசுப் போதனை |
| உப தொழில் | : | பேய்களை ஓட்டுதல், அப்பம் பலுகச் செய்தல், இறந்தவரை உயிர்ப்பித்தல் |
| நண்பர்கள் | : | பாவிகள் |
| எதிரிகள் | : | இல்லை |
| பிடித்தவேலை | : | தச்சுத்தொழில் |
| பிடித்த இடம் | : | தந்தையின் இல்லம். |
| விரும்புவது | : | அன்பை |
| வெறுப்பது | : | பாவத்தை |
| ஒரே சந்தோஷம் | : | பாவி மனந்திரும்புவது |
| முதல் சாதனை | : | 6 குடம் தண்ணீரை இரசமாக்கியது. |
| இறுதி சாதனை | : | சிலுவைமரணம் |
| இரத்தப்பிரிவு | : | O⁺ (பொதுவழங்கி) |
| பொழுது போக்கு | : | தனிமையான இடம் சென்று தந்தையுடன் உரையாடுவது |
| தொடவிரும்புவது | : | குழந்தைகள், தொழுநோயாளர்கள் |
| பிடித்த சொல் | : | மன்னிப்பு |

எனது பெயர் : இயேசுக்கிறிஸ்து. பலர் என்னை ஆண்டவர் என அழைப்பர்! நான் எனது வாழ்க்கைக் குறிப்பை அனுப்பியுள்ளேன். ஏனென்றால் உன் உள்ளத்தில் உயர்ந்த இடத் திலிருக்க நான் விரும்புகின்றேன். நீ விரும்பினால் நான் கீழே கொடுத்துள்ள விபரங்களை வாசியுங்கள்.

**கருதி :** நான் மனிதனை சட்டத்தின் சாபத்திலிருந்து மீட்டேன் (கலா.3:13) ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் ஆசீர்வாதங் களை எனது வழியாகவே உனக் கும் கிடைத்தன. (காண்க. கலா3 :14)

**கல்வித்தகைமை :** 12 வயதிலே சட்ட அறிஞருடன் பட்டிமன்றம் நடத்தி அவர்களை வாயடைக்க வைத்தது.

**தொழில் பின்புலம் :** எனக்கு ஒரே ஒரு முதலாளிதான் உண்டு (காண் லூக். 2:49). நான் ஒருபோதும் அசட்டைத்தனமாகவோ, சமூக மனிக்காமலோ, அமைச்சலினமா கவோ, சோம்பலாகவோ, மரியாதை யீனமாகவோ இருக்கவில்லை.

எனது முதலாளி என்னைப்பற்றி மிகவும் பாராட்டுக்குரிய வார்த் தைகளையே வைத்திருக்கிறார். (காண் மத்.3:15-17).

**பயிற்சித்திறமையும் தொழில் அனுபவமும் :** பின்வருவன எனது பயிற்சித் திறமைக்குள்ளும் தொழில் அனுபவத்திற்குள்ளும் அடங்கும்: ஏழைகள் ஏழ்மையிலி ருந்து விடுதலை அளித்தல், உள்ளம் உடைந்தோரைக் குண மாக்கல், சிறைப்பட்டோரை விடு தலை செய்தல், நோயுற்றோரைக் குணமாக்குதல், குருடருக்குப் பார்வை அளித்தல், சிறைப்பட்டோ ருக்கு விடுதலை அளித்தல். நான் ஒரு சிறந்த உளவளத்துணை யாளர் (காண்க எசா. 9:6). எனக்கு செவிமடுப்போர் தீங்கின்றி வாழ்வர், தீமை வருகையிலும் அச்சமின்றி அமைதியுடன் இருப் பர் (காண் நீதிமொழி 1:33). மிக முக்கியமாக உங்கள் பாவங் களிலிருந்து உங்களைத் தூய்மை யாக்கும் வல்லமையும் அதிகார மும் எனக்கு உண்டு (காண்க 1 யோவான் 1: 7 - 9).

**முக்கியமான சாதனைகள் :** நீ வாழ வேண்டும் என்பதற்காக நான் எனது வாழ்வைப் பலியாக்கினேன். (காண்க 2 கொரி. 5 :15).

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மிகப்பெரிய எதிரியை நான் தோற்கடித்து அதை அனை வருக்கும் காட்டினேன் (காண்க கொலோ. 2 :15). அற்புதமாக ஏழை களுக்கு உணவளித்தேன், நோயுற் றோரைக் குணப்படுத்தினேன், இறந் தோரை உயிர்ப்பித்தேன். இன்னும் பல முக்கிய சாதனைகள் உண்டு. அவற்றை இங்கே குறிப்பிட இட மில்லை. அவற்றை இணையத் தளத்தில் வாசிக்கலாம். என் இணை யத்தளம் ww. பைபிள். com. இந்த இணையத்தளத்தில் இணைவதற்கு வலைப்பின்னலோ அல்லது கணனியோ அவசியமில்லை. உள் அறைக் குள் சென்று கதவை தாழிட்டு தொடர்பை ஏற்படுத்தலாம்.

**உடல் கூறுகள் :** நீளமான தலைமுடி, கூரிய கண்கள், தாடியும் உண்டு.

**பிற குறிப்புகள் :** எல்லா இடங்க ளுக்கும் கால் நடையாகச் செல்ல முடியும். கழுதை ஓட்டவும் தெரியும். கயிறுகளால் சாட்டை பின்னவும், சாட்டையால் அடிக்கவும் தெரியும்.

**உறுதிப்படுத்துனர் :** உலகெங்கும் வாழும் என் சீடரும், என்னில் விசுவாசம் கொள்வோரும், எனது இறைவல்லமை நிறைந்த குண மாக்கல், மீட்பு விடுதலை, புதுமை கள் அனைத்திற்கும் சான்று பகர் வார்கள்.

## சிந்தனைத்துளிகள்

- சிறகுகள் வலித்தாலும் பறவைகள் பறப்பதில்லையா
- மருந்துகள் கசப்பானவை ஆயினும் அதன் விளைவுகள் இனிப்பானவை.
- தோல்விதான் வெற்றியின் முதற்படி
- பாவனையில் பலம் தும்பிக்கை, மனிதனின் பலம் நம்பிக்கை
- ஒரு நல்ல நூல் மிகவும் சிறந்த ஒரு நண்பன்.
- வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான்.
- தோல்விகள் இன்றி வரலாறுகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி மண்ணில் இடம் பெற்ற கொடுமையான போரினால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களுக்குள் அளவிடமுடியாத துன்பங்களோடு வாழ்கின்ற மக்களை தரிசித்து மிகவும் சிறப்பாகப் பணிபுரிகின்ற திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளை சந்தித்து உரையாடி அங்குள்ள நிலைமைகளைப் பற்றி தெரிந்து கொண்டோம். அவர்களோடு இடம்பெற்ற நேர்காணலை பாதுகாவலன் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**கேள்வி :** அடிக்கடி நீங்கள் பணிக்காக நலன்புரி முகாம்களுக்கு சென்று வருகின்றீர்கள் அங்குள்ள நிலைமை எப்படி இருக்கிறது?

**பதில் :** நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற மக்கள் மத்தியில் பணிபுரிவதன் மூலம் அவர்களின் நிலைமைகளை அறியக்கூடியதாக உள்ளது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் படிப்படியாக முன்னேறிச் சென்றாலும் அனைவரும் அதில் திருப்தி அடைவதாக இல்லை. தமது சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்தப்பட வேண்டும் என்ற ஆதங்கம் அனைவரிலும் காணப்படுகிறது. ஒருவாறு முயற்சி செய்து தங்கள் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி :** அவர்கள் வசிக்கின்ற குடிசையைப் பொறுத்தமட்டில் திருப்தியானதாக உள்ளதா?

**பதில் :** மக்களின் உறைவிடங்களைப் பார்க்கப்போனால் வெளியாக இருந்தாலும், மறைவாக இருந்தாலும் வசிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. வெயிற்காலங்களில் வெக்கை அதிகமாக இருப்பதனால் வெப்ப நோய்களினால் மக்கள் பீடிக்கப்படுகின்றனர். மழை காலங்களில் மழைநீர் உட்புகுந்து அனைத்தையும் நனைத்து நாசப்படுத்துகின்றது. அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை வார்த்தையில் வடிக்கமுடியாது.

**கேள்வி :** உணவு, நீர் என்பன தாராளமாகக் கிடைக்கின்றதா?

**பதில் :** மூன்று நேர உணவும் வரிசையில் நின்றே பெறவேண்டும். பெற்றுக்கொண்ட உணவைக்கூட சில நேரங்களில் நிம்மதியாக உண்ணமுடியாத நிலை. பணவசதி படைத்தவர்கள் மீன், மரக்கறி போன்றவற்றை பணம் கொடுத்து வாங்கி தாங்களே சமைத்து சாப்பிடுகின்றார்கள். நீரைப் பொறுத்தமட்டில் பாத்திரங்களை வரிசையில் அடுக்கி நாள் முழுவதும் வெயில் காய்ந்து பெறவேண்டியுள்ளது, குளிப்பதற்கு பாவிக்கும் தண்ணீர் தூய்மையற்றதாக இருப்பதனால் தோல் சம்மந்தமான சொறி, சிரங்கு போன்ற நோய்கள் மக்களைத் தாக்குகின்றது. இதுவும் ஒரு அவலமான நிலையே.

**கேள்வி :** நோயாளருக்கான மருத்துவவசதி எவ்வாறு அமைந்துள்ளது?

**பதில் :** நலன்புரி முகாம்களில் கடமை புரிகின்ற மருத்துவர்கள் சிங்களமொழி பேசுவர்களாக இருப்பதனாலும் தொடர்பாடல் ஓர் பிரச்சினையாக இருக்கிறது. இதனால் நோய் சரியாக இனங்காண முடியாமல் சில தவறுகள் ஏற்படுவதோடு நோயாளிகள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் உண்டு. துன்பப்படும் மக்களைக் கண்டு ஏனையவர்கள் கண்டும் காணாமல் இருப்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்

**கேள்வி :** அங்குள்ள மக்களின் கல்வி, ஆன்மீகநிலை எவ்வாறு உள்ளது?

**பதில் :** அங்குள்ள மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது மாலை நேர வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை, உயர்தரப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. எது எப்படி இருந்தாலும் மாணவர்களால் கல்வியில் ஒரு முழுமையை அடைய முடியாத நிலையே காணப்படுகிறது. ஆழமான விசுவாசத்தோடு வாழ்கின்றார்கள்: இவர்களின் ஆன்மீக வாழ்வுக்காக பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்றார்கள்.

**கேள்வி :** தாங்கள் எவ்வாறான பணிகளை முன்னெடுக்கின்றீர்கள்?

**பதில் :** ஆன்மீக, கல்விப்பணிகள் முதன்மைப்படுத்தப்படுகின்றது. சிறப்பாக பிரிந்து போன உறவுகள் ஒன்று சேர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றோம். இறந்து விட்டார் என்று கருதப்பட்டவர் உயிருடன் இருந்தால் அவர்களை ஒன்று சேர்ப்பதில் முனைப்பாகச் செயற்படுகின்றோம். நடமாடும் சுகாதார சேவையூடாக வைத்தியர்களின் உதவியோடு மருத்துவ சேவை வழங்குகின்றோம். உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றோம். அத்தோடு அருட்சாதனங்களை இவர்கள் பெற்றுக் கொள்ள குருக்களுக்கு பக்கபலமாகச் செயற்படுகின்றோம்.

**கேள்வி :** இவ்வாறான பணிகளில் தாங்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி கூற முடியுமா?

**பதில் :** நலன்புரி நிலையங்களுக்குள் நாம் எந்தவொரு பணியை மேற்கொள்வதாக இருந்தாலும் மேலதிகாரிகளின் அனுமதி தேவைப்படுகிறது. சிலவேளைகளில் சிலபணிகளுக்கு அனுமதி கிடைக்காமல் போவதும் உண்டு. உள்ளே சென்று நாம் பணியாற்றும் போது மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியுள்ளது. இவ்வாறு பலசவால்களுக்கு முகம் கொடுத்தே நாம் பணியாற்ற வேண்டியுள்ளது.

**கேள்வி :** இப்பணியை ஆற்றுவதன் மூலம் நீங்கள் திருப்தி அடைகின்றீர்களா?

**பதில் :** இப்பணிகள் மூலம் நாம் எமது அழைத்தலின் மேன்மையை உணரக்கூடியதாக உள்ளது. துன்புறும் மக்களிடையே பணிபுரிவது ஒரு ஆத்ம திருப்தியைத் தருகின்றது. மக்களை முழுமையாக திருப்திப்படுத்த முடியாவிட்டாலும் சிறிதளவேனும் மக்களின் துன்பத்தை தாங்கினோம் என்ற மனநிறைவு ஏற்படுகின்றது.

**கேள்வி :** எதிகால தங்களுடைய பணிகள் பற்றி?

**பதில் :** வவுனியா, செட்டிகுளம் பகுதியில் உள்ள முகாம்களில் நாம் அதிகம் பணியாற்றினாலும் எதிர்காலத்தில் அல்லாரை, மிருசுவில், கொடிகாமம், கோப்பாய் ஆகிய முகாம்களில் எமது பணிகளை விஸ்தரிக்க எண்ணியுள்ளோம். ஆற்றுப்படுத்தல் தேவைகளை இனங்கண்டு அவற்றை சிறப்பாக முன்னெடுக்கவும் குழுக்களாக கூடுதல் நேரத்தை மக்களோடு செலவழித்து ஆன்மீக ரீதியான நம்பிக்கையை ஊட்டி மனந்தளராது வாழ்க்கையை எதிர்கொள்ள வழிகாட்டுவதோடு பாடசாலைகள் ரீதியாகவும் ஆற்றுப்படுத்தல் சேவைகளை மேற்கொள்ள உள்ளோம்.

**நேர்காணல் : இ.ம.அமலரட்ணம், பேராலயம்**

# திருவழிபாடு பற்றிய கலந்துரையாடலும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும்

**Fr. M. றெக்ஸ் சவுந்தரா**
**வழிபாட்டு நடுவக இயக்குநர்**

அன்புடன் ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர்க்கு, கிறிஸ்துவுக்குப் புகழ்!

மனித வாழ்வும் வழிபாடும் இயல்பாகவே ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. அவை பிரிக்கப்பட முடியாதவை. எனவே எமது வாழ்வை மேலும் மேலும் வளப்படுத்த, எமது ஆலயங்களில் நடைபெற்று வரும் வழிபாடுகளை இன்னும் ஆழமாக அர்த்தமுள்ளதாக்குவதற்கு, திருவழிபாடுகளை நடாத்துவோர், வழிபாட்டு ஆயத்தங்களை மேற்கொள்வோர், வழிபாடுகளில் பங்கு கொள்வோர் வழிபாடுகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதும், அதற்காகத் தம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வதும் இன்றியமையாதவையாகும்.

தற்போது எம் மத்தியிலிருக்கும் வழிபாட்டு முறைகளில் சில மயக்கங்களையும், தெளிவின்மைகளையும், முரண்பட்ட செயற்பாடுகளையும் காண்கின்றோம். இவை எமது விசுவாசத்துக்கு ஊறு விளைவிப்பதாக அமைந்துவிடுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு, திருவழிபாடு பற்றிய தெளிவையும், ஒருங்கிணைந்த வழிபாட்டு முறைகளையும் முன்னெடுக்கும் நோக்குடன், ஏற்கனவே குருக்களிடமிருந்து பெறப்பட்ட திருவழிபாடு பற்றிய ஆலோசனைகளையும், கருத்துக்களையும் ஒன்று சேர்த்துக் குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் அருட்தந்தையர்கள் மேரி யோசப், ஜெறாட் சவிரிமுத்து, ஜெயரட்ணம், வழிபாட்டு நடுவக இயக்குநர் றெக்ஸ் சவுந்தரா ஆகிய நாம் யூன் மாதம் 11ம் நாள் ஒன்றுகூடிக் கலந்துரையாடினோம். இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை யூன் மாதம் 15ம் நாள் நடைபெற்ற குருக்களின் கலந்துரையாடலில் முன்மொழிவாக வைத்தோம்.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் புதியவை அல்ல. ஏற்கனவே நடைமுறையிலிருந்து வழுவிப் போனவற்றையே மீண்டும் நினைவூட்டுகின்றோம். இவை தாய்த் திருச்சபையாலும், மற்றும் எமது நாடு, பிரதேசங்களுக்கு ஏற்ப இலங்கைத் திருச்சபையாலும், யாழ் திருச்சபையாலும் முன்மொழியப்பட்டவை.

திருவழிபாடு கிறிஸ்துவின் செயற்பாடு. அது திருச்சபையின் ஒருங்கிணைந்த செயற்பாடு. தனி நபரின் அல்லது குழுக்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடு. எனவே நாம் அவற்றுக்குக் கட்டுப்பட்டோர் ஆக வேண்டும். இவ்வொன்றுபட்ட செயற்பாட்டில் திருச்சபையின் ஒருமைப்பாடும் நன்கு வெளிப்படுகின்றது.

எனவே இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உங்களுக்கு அறியத் தருவதோடு, இவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் கேட்டு நிற்கின்றோம்.

1. ஞாயிறு, கடன் திருநாட் திருப்பலிகளின் போது வருகைப் பவனி ஒழுங்கு: திருப்பலிப் பொ. போதனை 82 :
(1) முதலில் தூபக் கலசம் ஏந்திய பணியாளர்
(2) எரியும் மெழுகுதிரியைக் கொண்ட இருவருக்கு நடுவே திருச்சிலுவை
(3) பீடத் துணைவர்
(4) வாசகர்கள் (ஒருவர் நற்செய்தி நூலை ஏந்திச் செல்லலாம்)
(5) குரு

2. வழிபாட்டின் முன்னுரை அன்றைய வழிபாட்டின் மையப்பொருள் பற்றியதாக இருக்க வேண்டும்; வாசகங்களுக்கான விளக்கமாக இருக்கக் கூடாது. முன்னுரை, வாசகங்கள், மன்றாட்டுக்களை வாசிப்பவர்கள் வழிபாட்டுக்கு இடையூறு விளைவிக்காத, பண்பான ஆடைகளை அணிந்து வருவதைக் குருக்கள் ஊக்குவிக்க வேண்டும்.

3. வருகைப் பாடல் பாடப்படும் போது வருகைப் பல்லவி வாசிக்க வேண்டிய தேவையில்லை.

4. இறைவார்த்தைப் பகுதியை இறைவார்த்தை மேடையில் (ambo) நின்று நடாத்துவது அர்த்தமுள்ளது.

5. தவிர்க்கப்பட வேண்டியவை :

(1) "எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து..." என்ற செபம் சொல்லும் போது குரு மக்கள் மேல் கை நீட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

(2) நற்கருணை மன்றாட்டில் குரு தனது சொந்தக் கருத்துக்களைச் சேர்த்துச் செபிப்பதைத் தவிர்த்தல். குரு தமது சொந்தக் கருத்துக்களை விசுவாசிகள் மன்றாட்டுப் பகுதியில் சேர்த்துக்கொள்ளலாம். அத்தோடு அவசியமற்ற செய்கைகளைத் தவிர்த்தல். உ+ம் "உயிர் தெழும் நம்பிக்கையுடன் இறந்து போன..." என்ற இடத்தில் மௌனம் காப்பது.

(3) "இவர் வழியாக..." என்ற பகுதியில் மக்கள் குருவோடு சேர்ந்து செபிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(4) திருப்பலிக்குள் புனிதர்களுக்கான நவநாட் செபங்கள் செபிப்பதை, மரியன்னையை நோக்கி நாட்டுக்காகச் செபம் சொல்வதைத் தவிர்க்க வேண்டும்.

6. நற்கருணையைக் கரங்களில் கொடுப்பது (துறவிகளுக்கு உட்பட) தவிர்க்கப்பட வேண்டும். நற்கருணை வழங்கும் போது பக்தி, மரியாதை, ஒழுங்கு என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். (3ம், 4ம் வரிகளில் நின்று நற்கருணை பெறுவதைத் தவிர்ப்பது நல்லது.) இறைமக்களை வரிசையில் வரும்படி அழைத்து நற்கருணை வழங்கலாம்.

7. **திருமணத் திருப்பலி :**

(1) கலப்புத் திருமணம் (mixed marriage) அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட திருச்சபையினருடனான (mainline Churches) திருமணம், திருப்பலியில் நிறைவேற்றப்படலாம்.

(2) வேறு மதத்தவருடனான், மற்றும் அங்கீகரிக்கப்படாதச் சபையைச் சேர்ந்தவருடனான (disparity of cult) திருமணம், திருப்பலியில் நிறைவேற்றப்பட முடியாது. திருமணத்துக்குப் பின் உடனே (அவர்கள் விரும்பும் போது) நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படலாம்.

(3) ஏற்கனவே கூடி வாழ்பவர்களுடைய (concubinage) திருமணம், திருப்பலியில் நிறைவேற்றப்பட முடியாது. திருமணத்துக்குப் பின் உடனே (அவர்கள் விரும்பும் போது) நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படலாம்.

குறிப்பு: இல. 7. (2), (3)ல் கூறப்பட்டுள்ள திருமணச் சடங்கில் குரு குருவுடை வெண்ணாடையும், தோள்த் துகிலும் (surplice & stole) அணிய வேண்டும்.

8. **கூட்டுத் திருப்பலிகள் :**

(1) திருமணக் கூட்டுத் திருப்பலி:
★ திருமணத் திருப்பலி பொதுவாகக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை.
★ மணமக்களின் உடன்பிறப்புச் சகோதரக் குருக்கள் இருந்தால், அவர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கலாம்.

(2) நல்லடக்கக் கூட்டுத் திருப்பலி :

★ நல்லடக்கத் திருப்பலி பொதுவாகக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை.

★ குருக்கள், துறவிகளின் நல்லடக்கத் திருப்பலிகள் கூட்டுத் திருப்பலிகளாக ஒப்புக்கொடுக்கப்படலாம்.

★ ஒரு குருவின், அல்லது ஒரு துறவியின் பெற்றோர், உடன்பிறப்புச் சகோதரர்களின் நல்லடக்கத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படலாம்.


9. கூட்டுத் திருப்பலியில் முதன்மைக் குருவுக்கு அடுத்து, அவருக்கு வலப் பக்கத்தில் நிற்கும் குருவே முதலில் நற்கருணை மன்றாட்டைத் தொடர்வார்.

10. வழிபாட்டுப் பாடல்கள் (திருஇசை) இறைமக்களை வழிபாட்டில் ஆர்வமுள்ள முறையில் பங்கு கொள்ளவைக்குவிப்பதாக அமைய வேண்டும். அவை இசைக் கச்சேரிகள் அல்ல. இறைமக்களும் வழிபாட்டு இசையை இரசிப்பவர்களாக மட்டுமல்லாமல் இசையினூடாக செபிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். எனவே அதற்கேற்ப பொருத்தமான பாடல்களைத் தெரிவு செய்து பாடுவதும், இசைக் கருவிகளை வழிபாட்டின் இயல்புக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்துவதும் இன்றியமையாதது. இறைமக்கள் யாவரும் சேர்ந்து பாடக்கூடியதாக, அவர்களுக்கும் பாடற் பயிற்சி அளிப்பது வரவேற்கக் கூடியது.

11. கர்நாடக இசையை நன்கு கற்காதவர்கள் சுரங்கள் பாடும்போது

(8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு
# ஜூன் 2009 - ஜூன் 2010



## மகத்துவம்

மானிடப் படைப்பின் மெய்ப்
பொருள் கண்ட உடபா பணிக் குருக்களே
வாழ்வில் பல சுடர் சுமந்து இறைபணி செய்யும்
இணையற்ற பண்பாளரே

நீங்குறு நிலைவுதனை
தீயில் சுட்டெரித்து மாண்புறு
ஒளி கண்ட மகான்களே அரும்
வாழ்வின் வழி காட்டிகளே

பாவம் விலக்கி நல்பாதை காட்டும்
பரமன் வழியரே உலக
ஆதாயம் விரும்பா ஆத்ம பலமே

என்னுள் சொன்ன வார்த்தை சொல்வோமோ
உங்கள் வாழ்வின் திசைவழியை
காலங்கடந்தும் கல்வெட்டில்
மறைபடுமோ - உங்கள்
வாழ்வின் பதிவுகள்

ச. அனில்குமார்
மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறை.

## கருணையுருவான சரத்ஜிவன் அழகளாரைக் காண்பதெப்போ

மின்னாமல், முழங்காமல், கார்முகிலும் இடித்ததுபோல்
என்னாவி அதிரவைக்கும் செய்தியொன்று சொல்லுகின்றேன்
என்னாளும் இன்முகத்தோடுரையாடும் தெய்வமகன்
எத்திக்கும் புகழ்தேடி இரு கண்ணையும் பொருளும்
பொன்னான மறையுரைகள் பொழிகின்ற பேரருளன்
பொலிகின்ற வதனத்தில் தவழ்கின்ற புன்னகைகள்
தன்னாலன் வாழ்நெறிக்குக் கலங்கவைத்த தியாகியவன்
அருட்தந்தை சரத்ஜீவன் அழகளாரைக் காண்பதெப்போ!

பாஸ்தியாவின் வண்ணமுகம் காண்பவரைக் கவர்ந்திருக்கும்
பிரிவுடனே அன்புமொழியின் அவலங்கள் தீர்த்துவைக்கும்.
ஆலமரம் போல் விரிந்து பரந்தகன்ற பூமியிலே
காவலிக்கும் மனமிளிர உருகிநடைபயின்றவரு
வேல்துளைத்த புண்ணிலே செந்தணலும் தணலுற்றாற்போல்
வெந்தழிந்த மக்களுடன் வேதனைகள் சுமந்த குரு
காலம் தான் பலசெய்தலால் ஞாலம் கதறியழ
ஞானத்தில் முதிர்ந்தகுரு இறைவனடி சேர்ந்தாரே,

பாலர்க்கோர் முன்பள்ளி பங்கிற்கு மடமெல்லாம்
சாலச் சிறந்திடவே அமைத்துக் கொடுத்தாரே
நூலைக் கற்றுணர்ந்த ஆசான்கள் அளித்தவர்க்கு
நுண்ணறிவி னொடுபல் வாற்றல்கள் மகிழ வைத்து
பல அவர் அடி வைத்துப் பார்த்து இரசித்தவரோ
காலமெல்லாம் சகிக்கவில்லை வயிறெரிய முடிந்தாரே
கருணையுரு வானசரத் ஜீவனைக் காண்பதெப்போ!

ஏ.எஸ். பிள்ளை, வன்னி.

## பங்குக் குருக்களின் பணிவாழ்வு

பங்குத் தளங்களில் பக்தியோடு பணிபுரியும்
பண்புள்ள பங்குக் குருக்களே
பணிவாழ்வில் உங்கள் பணி
பயனுள்ள பெருமையுள்ள பணியாகும்
ஆயனாக இருந்து மறைதனை மேய்க்கும் குருக்களே
ஆண்டவரைப் பின்பற்றி அயராது உழைக்கின்றீர்கள்
ஆன்ம நலன் வேண்டி அக்கறையோடு செயல்படுகின்றீர்கள்
ஆதரவற்ற மனங்களையே மகிழ்ச்சியடையச் செய்கின்றீர்கள்

வளமுள்ள பங்கு வளமற்ற பங்கு
வளமுடனே வாழ்வதற்கு வழிவகைகளை செய்கின்றீர்கள்
வருந்துவோர்க்கு ஆதரவு கொடுக்கும் நீங்கள்
எளியோரோடு ஆற்றும் பணி மகத்தானதே

எமக்காகப் பணிபுரியும் எம் பங்குக் குருக்களை
எம் உள்ளத்தால் நினைக்கின்றோம்
எம் குருக்களின் பணிவாழ்வு சிறக்க
எல்லாம் வல்ல இறைவனை வேண்டியே நிற்கின்றோம்

திருமதி. செல்வராணி ஞானரட்ணம்
கன்னாதிட்டி.

## நல்வழி காட்டும் குருக்களே வாழ்க

திருச்சபை வரும் தோட்டத்திலே
பல்வேறு பணியாளர்கள் மத்தியிலே
சிறோடும் சிறப்போடும் பணிகள் பல
புரியும் குருக்களே உங்கள் பணிகள் வாழ்க

கவலைகள் பல நிறைந்த இவ் உலகிலே
உயிரைப் பொருட்படுத்தாது
தேடிச் சென்று உதவிக்கரம் நீட்டும்
உங்கள் அர்ப்பணிப்பு வாழ்வு வளர்க

இறை இயேசுவுக்காக வாழ்கின்றோம்
என்பதை சொல்லால் மட்டுமல்ல செயலால்
எமக்கு காண்பித்து எமக்கு முன்மாதிரிகை
காட்டுகின்ற உங்கள் பணிவாழ்வு - வாழ்க

ஓயாமல் இறை வார்த்தையை அறிவிப்பதோடு
பொதுநிலையினர் எமை நல்வழிப்படுத்தும்
உங்கள் நல் உள்ளம் வாழ்க

"வாழ்க உங்கள் இறைபணி
வளர்க நீங்கள் எந்நாளும்"

அ. சுசிலட்டா,
கல்முனை.

## எப்போதும் நீ யேசுநேசனே!

பெயரில் மட்டுந்தானா?
பீடு மிக்க உன் வாழ்விலும்
நீ யேசுநேசனே!

ஞான ஒடுக்கங்களில்
உனது நா
வானமழை போல்
வார்த்தைகளைப் பொழியும்
அது உள்ளங்களை
வாழ வைக்கும்

அன்னை மொழி போல
ஆங்கிலமும்
வண்ணமுற வாய்த்தவன் நீ!

புன்னகை எப்போதும்
உன் முகத்தில் பூத்திருக்கும்
இன் சொல் கேட்போர்க்கு
இதம் தரும்

எளிமை உன் அலங்காரம்
எதிலும் ஓர் நிதானம்
ஒளிவு மறைவில்லா உள்ளம்
வழி காட்டும் திறமை
உனக்கொரு வரப்பிரசாதம்
துளியளவும் காழ்ப்பு
உன்னைத் தொட்டதேயில்லை

சினம் உன்னைச்
சேர்ந்ததில்லை
மனமெல்லாம் பொறுமை
மகிழ்ச்சி, சாந்தம்
குணம் இது அதிசயம்
குறிஞ்சி மலர் நீ!
கத்தோலிக்க வாழ்வில்
நீ ஒரு கலங்கரை விளக்கம்
எத்திசையிலும் அதன் பிரகாசம்
எழுந்து நிற்குது!

குருவரத்தில்
நீ ஒரு துருவ நட்சத்திரம்



பிறந்ததன் பலனைப்
பெற்றவன் நீ!

குரு என்னும் சொல்லுக்கு
இருளை நீக்குதல் என்று பொருள்
இதற்கு நீ ஒரு சான்று!

உன் போல் துறவி
ஒரு நூறு இருந்தால்
பொன்னாகும் பூமி
புதும்பிறவி எடுக்கும்

பத்திரிசியார் கல்லூரியில்
நீ பணியாற்றிய காலத்தில்
அது
முத்திரை பதித்தது
முடி சூட்டிக் கொண்டது.

அமலமரித் தியாகிகள்
அணியில் நீ ஒரு
அன்றலர்ந்த தாமரை
திமலன் பாதம்
அழகு செய்யவா
நீ அங்கே சென்றாய்!

- வாகரைவாணன் -

## நாளாந்தம் குருக்களுக்காக செபிப்போம்

விண்ணகத் தந்தையே நித்தியமுதல் குருவாகிய உம் திருமகனின் முகத்தை நோக்கி, அவரின் அன்பின் பொருட்டு, உமது குருக்களின் மேல் இரக்கமாயிரும். குருத்துவ அழைப்பின் அருளை அவர்கள் நன்கு உணரச் செய்தருளும். அலகை அவர்களை வெற்றி கொள்ளாதிருக்கும் பொருட்டு, அவர்களை உமது அரவணைப்பில் காத்தருளும்.

ஓ இயேசுவே! சோதனையில் வேதனையுறும் குருக்களுக்காகவும் தனிமையில் வாடும் குருக்களுக்காகவும் மரண படுக்கையில் இருக்கும் குருக்களுக்காகவும் இறைஞ்சுகிறேன். எனக்குப் பலமுறை பாவப் பொறுத்தலை அளித்த குருக்களுக்காகவும், என் துணையுடன் திருப்பலி நிறைவேற்றி, எனக்கு உம் திருவுடலையும் குருதியையும் அளித்த அனைத்து குருக்களுக்காகவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஓ இயேசுவே! எல்லா குருக்களையும் உமது அன்பின் அரவணைப்பில் காத்து அவர்களுக்குத் தேவையான ஆசீரையும் அவர்கள் என்றென்றும் தங்கள் அழைத்தலில் நிலைத்திருக்கும் அருளையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.



## தந்தை மரிய வியானி வாழ்க்கை வரலாறு
### குருக்களின் பாதுகாவலர்

குருக்களுக்கு எடுத்துக்காட்டாகவும் மற்றும், பாதுகாவலராகவும் திகழும் மரிய வியானி, 1786 ஆம் ஆண்டு மே 08ஆம் திகதி பிரான்சு நாட்டில் உள்ள லியோன்ஸ் என்னும் இடத்தில் பிறந்தார். இவருடைய குழந்தை பருவம் பிரான்சு புரட்சியில் வந்த மாற்றங்களில் கழிக்கப்பட்டது. ஆனால் இவர் புரட்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட ஆலயத்திற்கும், திருப்பலிக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். பதின்மூன்றாம் வயதிலே இவருக்குப் புதுநன்மை வழங்கப்பட்டது. இதற்குப் பின் ஐந்து வருடம் கழித்து நான் ஒரு குருவாக ஆவேன் என்று தன் தந்தையிடம் தெரிவித்தார். இரண்டு வருடமாக மரிய வியானியைத் தனது பண்ணையில் வேலைக்கு வைத்துக் கொண்டார். பின்னர் ஏகுலியில் உள்ள ஆலயப்பள்ளியில் இவர் சேர்ந்தார். ஆரம்பத்தில் லத்தீன் மொழி படிக்க மிகவும் சிரமப்பட்டார். 1809 ஆம் ஆண்டு மீண்டும் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். இவர் இளநிலை குருமட படிப்பையும் மற்றும் இறையியல் படிப்பையும் லியோன்ஸ்இல் முடித்தார். லத்தீன் மொழியைப் படிக்க இவர் சிரமப்பட்டாலும் இவருடைய Vicar General இவரிடம் மிகுந்த அன்பு காட்டி இவரை 1814ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்த பரிந்துரைத்தார். இவருடைய முதல் குருத்துவப்பணி அருட்பணி பெல்லியின் பங்கு ஆலயத்தில் துவங்கியது. தனது குருத்துவப் பணியை பாவ சங்கீர்தனம் கேட்பதற்கே செலவழித்தார்.

1817 ஆம் ஆண்டு ஆர்ஸில் டோம்பே என்னும் இடத்தில் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இது ஒரு ஏழை மற்றும் பின் தங்கிய பங்காக இருந்தது. இருப்பினும் இந்த வாய்ப்பைக் கடவுளுக்குத் தரும் சேவை என்று நினைத்துக்கொண்டு இந்த ஆர்ஸை ஒரு விசுவாசமிக்க, சமயப்பற்று மிக்க கிராமமாக ஆக்க அயராது உழைத்தார். இங்குள்ள பட்டி தொட்டிகளிற்கெல்லாம் சென்று மறையுரை ஆற்றினார். இதன் விளைவாக அங்கு அப்பப்போது வைத்திருந்த மதுபான கடைகளை அகற்றினார். மக்களைத் திருப்பலிக்கு வரவழைத்தார். மக்களை சத்தியம் செய்யும் வழக்கத்தைத் தவிர்க்க செய்தார். இதனால் சிலர் இவரைக் கடிந்து கொண்டார்கள். பலர் பாராட்டினார்கள்.

1824 ஆம் ஆண்டு இரண்டு பெண்கள் கூடி லிப்ரோவிடன்ஸ் (La providence) என்னும் இடத்தில் ஏழைகளுக்கு என்று ஒரு பள்ளியை ஆரம்பித்தார்கள். மரிய வியானி புனித பிலோமினம்மாள் மேல் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். இவரின் குருத் துவ பணியின் வளர்ச்சியின் பெருமை இந்தப் புனிதைக்கே சேரும் என்று கூறினார். ஆர்ஸ் வெகு விரைவில் ஒரு புண்ணிய ஸ்தலமாக மாறியது. ஆதலால் 1840 ஆம் ஆண்டு ரயில் முன்பதிவு செய்யும் மையத்தை அமைக்க வேண்டியதாயிற்று.

தந்தையின் மிகப் பெரிய புதுமை என்ன வென்றால் அவருடைய பாவ சங்கீர்தனம் கேட்கும் தன்மை. மக்கள் எப்படியாவது தந்தையிடம் பாவ சங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்று கருதினார்கள். ஆக தந்தை 12 மணி நேரத்திற்கு மேலாக பாவசங்கீர்தனம் கேட்பார். குளிர்காலத்தில் 12 மணி நேரமும், வெயில் காலத்தில் 16 மணி நேரமும் கேட்பார். மக்களின் குறைகளை மிகுந்த கவனத்துடன் கேட்டுக் குறையைப் போக்கினார். இதன்மூலம் தந்தை பல பேர்களை மனம் திரும்ப வைத்தார். தந்தை மற்றவர்களின் மனக்கவலையை எளிதில் புரிந்து கொண்டார். இதுமட்டுமல்லாமல் அவர்களைத் தகுந்த முறையில் வழிநடத்தினார். இறைவன் இவருக்குக் கொடுத்த இந்தக் கொடைதான் பெரும்பாலான மக்களைத் தந்தையிடம் கொண்டு சேர்த்தது. மரிய வியானியின் சொற்பொழிவுகள் அர்த்தமுள்ளவையாகவும், ஆழ்ந்த சிந்தனையோடும் இருந்தது. அவர் கொஞ்சம் பேசினாலும் தேவைக்கு அதிகமாகப் பேசியது இல்லை. தந்தை ஆர்ஸில் நாற்பத்தோர் வருடமாக பங்குத்தந்தையாக இருந்தார். இவருடைய அயராத மக்கள் பணி ஆகஸ்ட் 4ஆம் திகதி 1859ஆம் ஆண்டு முடிவடைந்தது. தந்தை இறைவனடி சேர்ந்தார். கத்தோலிக்க திருச்சபை இவரது உயர்ந்த பணி வாழ்வையும், ஆன்ம வாழ்வையும் பார்த்து இவரைத் திருச்சபையில் மிக உயர்ந்த இடத்தில் வைத்து, ஒவ்வொரு குருவானவர்க்கும் எடுத்துக்காட்டாகவும் மக்களுக்கு நல்ல ஆன்ம வழிகாட்டியாகவும் திகழச் செய்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தென்னையும் குருவிச்சையும்

அருள்தந்தை
இராசேந்திரம் ஸ்ரலின்

"அம்மா எனக்கு வேலை கிடைச்சிட்டுது. நாளைக்கு வரச்சொல்லிக் கடிதம் வந்திருக்கனை." காந்தன் சொன்னபோது தாய் சகுந்தலாவுக்கு மனத்திலிருந்த பாராங்கல்லை யாரோ இறக்கி வைத்தது போன்ற உணர்வு. மாதம் சீட்டுப் போட்டுக் கடனைத் தன்னிலைப்பட்டு மூத்தவளையும் ஒரு மாதிரி கரை சேர்க்கலாம்.... தனக்குரிய கவலைகளின் வழியில் அவளது கற்பனை பிரவாகித்துப் பாய்ந்தது.



"மாதாட்டை மண்டாடினதுக்கு அவா எங்களைக் கைவிடேல ராசா. பின்னேரம் சுவாமியிட்டை நன்றிப் பூசைக்குக் காசு கொடுக்கப்போறன்" என்று தன் மகிழ்ச்சியையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினாள் சகுந்தலா.

காந்தன் வீட்டில் மூத்த மகன். பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு வேலை தேடி அலைந்தவன். விடா முயற்சியால் தொண்டர் நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்து பெருமகிழ்ச்சி அவருக்கு.

மகனுக்கு வேலை கிடைத்ததும் அப்பா தங்கராசாவின் கனவுகள் சிறகு கட்டிப் பறக்கத் தொடங்கின. 'நானும் உழைச்சு உழைச்சு உடம்பும் களைச்சுப் போச்சுது. மகன் உழைக்கத் தொடங்கிட்டான். இனி எனக்கென்ன குறை. பிள்ளையளைப் படிக்க வைச்சன் அதுகளின்ர உழைப்பிலை சந்தோசமாயிருந்து சாகிறதுதானே. முதல் சம்பளத்திலை என்ன வாங்கித் தரப்போறானோ.... தாய்க்கும் சகோதரங்களுக்கும் என்ன பிரசன்ற் வாங்கி வருவானோ.... எல்லையின்றி விரிந்து சென்றது.

முப்பதாம் திகதி எப்ப வரும் என்று நாட்களை எண்ணிக் கொண்டேயிருந்தாள் சகுந்தலா. கடைக்கார சின்னா அண்ணையும் இரண்டு மாதக் கடன் கட்டேலை என்று புறுபுறுக்கிறார். அது கட்டி முடிச்சிட்டால் மகனின் சம்பளத்தில் மாதம்

மாத இறுதிநாள் பின்னேரம் காந்தன் தன் பழைய சயிக்கிளை முத்தத்திலை நின்ற மாமரத்திலை சாத்துவதும் அவன் முகம் மலர்ந்திருந்ததும் தெரிந்தது சகுந்தலாவுக்கு. திண்ணையில் ஓலைப்பாயில் படுத்திருந்து சுருட்டுக் குடித்துக் கொண்டிருந்த தங்கராசாவின் மனம் கலவரப்படத் தொடங்கியது. 'கையிலை வித்தியாசமா ஒண்டும் கொண்டு வாறமாதிரித் தெரியேலையே. இடையிலை ஏதாவது நடந்திட்டுதோ. சா.... அப்பிடி இருக்காது. தொண்டர் நிறுவனம் தானே சில நேரம் இண்டைக்கு சம்பளம் கொடுக்கேலையாக்கும்..... என்று தன் மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

கொட்டில் வீடு தனக்குத் தலையிலை இடிக்கு மென்று குனிந்து கொண்டே "அப்பா பத்தாயிரம் சம்பளம் தந்தவங்கள். பிறகு பிறகு கூட்டித் தாறம் எண்டவே. மரியாம்பிள்ளை மாமா புதுச் சீட்டுத் தொடங்கிறாராம். மாதம் எண்ணாயிரமாம். என்னையும் சேரச் சொன்னார். என்ர உடுப்புக்கும் கைச்செலவுக்கும் இரண்டாயிரம் வைச்சுக்கொண்டு சீட்டுக் காசுக்குக் கொடுத்திட்டன். நான் ஒரு ஹீரோ ஹொண்டா எடுக்கப் போறன். கூறல் சீட்டாம் கெதியாய் எடுத்திட்டு மாதம் மாதம் கட்டி முடிச்சிடுவன்."

சகுந்தலாவும் தங்கராசாவும் கட்டிய பிரமாண்டமான கற்பனைகள், விமானக் குண்டுபட்டுச் சிதறிச் சிதைந்த ஓலைக் குடிசைபோலானது. தங்கராசா தன்னைச் சுதாகரித்துக்கொண்டு. "ஓ. மற்றப் பிள்ளையள் மாதிரி நாலுபேருக்கு முன்னாலை நீயும் இருக்கத் தானே வேணும். எங்களுக்குக் கஷ்ரமெண்டு ஊருக்குக் காட்டி யாரும் ஏதும் உதவி செய்யவா போகினம்." போதாக்குறைக்கு சகுந்தலாவும், "ஓ. என்ரை பிள்ளையள் நல்லாயிருக்கிறதைப் பார்த்து மற்றவே கதைக்க வேணும் என்றுதானே எனக்கும் விருப்பம்." களைத்துப் போய் வந்த மகனுக்கு சுடச்சுடத் தேத்தண்ணி கொண்டு வந்து கொடுத்தாள் பாசம் குன்றாத அன்னை. இரவுச் சாப்பாட்டு நேரம் தன் தாயும் தகப்பனும் உண்மையான உணர்வுகளை மறைத்துக்கொண்டு வழமைக்கு மாறாகக் குரலை உயர்த்தி இடையிடையே செயற்கையாகக் கதைப்பதையும், வேதனையால் அதிக நேரம் மௌனம் சாதிப்பதையும் புரியும் அளவுக்கு அவனது நன்றியுணர்வு மேலோங்கி வரவில்லை. சுயநலம் அவன் இதயக் கண்களை மறைத்துக்கொண்டன.

ராணி பக்கத்து வீட்டில் குடியிருப்பவள். அவளது கூலிப்பிழைப்புத் தான் குடும்பத்தை ஒருவாறு ஓட்டிக் கொண்டிருந்தது. மகன் யசோதரனை ஏ.எல். படிக்க வைக்கவே அவள் திண்டாடித் திணறியவள். தன் மகனைப் படிக்க வைத்துப் பெரியவனாக்க வேண்டும் என்ற உத்வேகம் மட்டும் அவளை உந்திக்கொண்டிருந்தது. அங்கை மாறி இங்கை மாறிக் கஷ்டப்பட்டுப் படிப்பிக்க வைத்தவளின் முயற்சி வீண் போகவில்லை. அவன் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து அண்மையில் தான் கொழும்பில் வெளி நாட்டு கம்பனி ஒன்றில் எக்கவுண்டனாய் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். கொழுத்த சம்பளம்.

தம்பி சம்பளம் எடுத்தவுடன் என்னென்ன செய்வான் என்பது வீட்டில் எல்லோருக்கும் தெரியும். சம்பள நாட்கள் நெருங்க நெருங்க அக்கா நதியா மனம் சந்தோசப் பரபரப்பால் துடித்தது. அவன் பல்கலைக் கழகம் போகமுன் சொல்லிய வார்த்தைகள் இன்னும் மனதில் ஒலித்துக்கொண்டிருந்தது: "அக்கா நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை. நான் உழைச்சு உன்னைப் பாப்பன். அதுதான் என்ர சந்தோசம். அப்பிடித்தான் நான் படிக்கிற காலத்திலை யாரையும் பேசி வந்தாலும் கடன்பட்டெண்டாலும் எல்லாம் செய்வன். வேலை கிடைச்சாப்பிறகு கடனை அடைப்பன். நான் உன்னைக் கைவிடமாட்டான் அக்கா." உள்ளூர மகிழ்ச்சி என்றாலும் பாசம்கலந்த குறும்போடு,

"போடா நீ இப்ப உப்பிடித்தான் சொல்லுவாய். கம்பசுக்குப் போனாப் பிறகு மாறிப்போடுவாய். உத்தியோக மாப்பிள்ளையளைத்தானே பெட்டையள் மடக்கப் பாப்பளவே. நீயும் காதல் கூதல் என்று ஓடித்திரிவாய். வேலை கிடைச்ச உடனை எப்ப கலியாணம் என்று ஒற்றைக் காலிலை நிப்பாய். எத்தினை பெடியள் தங்கடை தாய் தகப்பன் செய்யிற தியாகத்தை நினைத்து வீட்டைப் பார்க்க நினைக்கினம்?. வசதியுள்ள பெடியளைப்போல தாங்களும் வாழவேணும் என்று ஆசைகளை வளர்க்கிறது. சொகுசு வாழ்க்கை தொடருறது. சகோதரங்களை மறக்கிறது. இதுதானேடா நாங்கள் காணுறது." பொய்க்கோபத்தோடு அருகில் படுத்திருந்த அவன் முதுகைத் தள்ளி விட்டாள். நினைவுகளை மீட்டிப்பார்க்க அவளுக்குச் சந்தோசமாக இருந்தது. தன் தம்பி தனக்கு திருமண ஆயத்தம் செய்வது போன்ற ஒரு கற்பனை. தன் சின்ன மகளுக்கு குளிராக்குதாம் என்று ராணியிடம் இந்தத் 'இப்பிடியல்லோ பிள்ளையள் இருக்க வேணும். இந்தப்பிள்ளையைக் கடவுள் ஆசீர்வதிக்க வேணும். ராணி புண்ணியம் செய்தவள் தான்... என்று மகிழ்ச்சியடைந்த அவள் யசோதரனையும் தன் மகனையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறவில்லை. 'என்ர மகன் தனக்கு நாலு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கு கரை சேர்க்க வேணும் என்ற ஒரு எண்ணமுமில்லை. இரண்டு தம்பிமாரையும் படிப்பிக்க வேணும் என்ற நினைப்புமில்லை தகப்பன் உழைச்சுக் களைக்குது அவரை இனியாவது வீட்டிலை இருத்திச் சாப்பாடு போடவேண்டும் என்ற சிந்தனைகூட இல்லை' ஏக்கப் பெருமூச்சு ஏற்கனவே உள்ள வேதனையைக் கூட்டுவதாகவே அமைந்தது.

அவளது நினைவுகளை தடுத்தி நிறுத்துவது போன்று இருந்தது யசோதரனின் பாசம் நிறைந்த பேச்சு "அம்மா இனிமேல் கவலைப்படாதையுங்கோ. அப்பா சாக எவ்வளவு கஷ்ரப்பட்டு எங்களைப் படிக்க வைச்சனியள் என்றதை மறக்கேலாதம்மா. உங்களை நான் நல்லாய் வைச்சுப் பாப்பன். அக்காவையும் தங்கச்சியையும் கரைசேர்ப்பன். நீங்கள் இனி ஒன்றுக்கும் கவலைப்படாதையுங்கோ."



துண்டு வாங்க வந்த சகுந்தலாவுக்கு அங்கு கண்ட காட்சி ஒரு கரையில் மகிழ்ச்சியையும் மறு கரையில் ஏக்கத்தையும் வளர்த்தது. யசோதரன் அம்மாவுக்குப் பொருத்தமான பிங் கலர் சாரியும் ஒரு பவுண் சங்கிலியும், தங்கச்சிக்கு படுச் சாறியும் மோதிரமும், தம்பிக்கு சேட்டும் லோங்சும் மணிக்கூடும் வாங்கி வந்து கொடுத்துக்கொண்டிருந்தான். கொடுத்துக்கொண்டிருக்கும் போதே தன் அக்காவுக்கு தான் ஒரு நல்ல குணமான பையனைப் பார்த்திருக்கும் கதையையும் சொல்லிக் கொண்டிருந்தான் யசோதரன். மகனின் நன்றியுணர்வும் பொறுப்புணர்வும் அவளது நலிந்த மனதுக்கு தேன்போல இருந்தது.

மகனுக்குப் பிடித்த இராசவள்ளிக் களி செய்ய குசினிக்குள் போனாள். "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்ற பழைய தத்துவப்பாடல் எங்கிருந்தோ வர அதை இரசித்துக் கொண்டே மகனுக்குக் கொடுக்க இராசவள்ளிக் களியை அகப்பையால் அள்ளி லைட் சில்வர் கோப்பையில் தாராளமாய்ப் போட்டுக் கொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனை)

## கடவுள் திருமுன் வீற்றிருந்து... (2ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வுலகிற்கான நற்செய்தியை மரியாளுக்கு தெரிவித்தவரும் இவரே (லூாக் 1:26-35). இறைத்தூதர் இருக்கின்ற இடத்தில் இறைவன் முழுமையாக பிரசன்னமாயிருக்கிறார். கபிரியேல்தூதர் அதிகாரத்தாலும், அருள் தன்மையாலும் அனுப்பியவரையே வெளிப்படுத்துகிறார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இரபாயேல் என்றால் இறைவன் குணமாக்குகிறார் என்பது பொருளாகும். தோபித்து என்னும் கடவுளின் மனிதர் தம் கண்களினால் கடவுளின் உன்னத ஒளியைக் காணும் பொருட்டு அவருடைய கண்களிலிருந்து வெண் புள்ளிகளை நீக்கவும், அஸ்மதேயு என்னும் கொடிய அலகையை இரகுவேலின் மகள் சாராவிடம் இருந்து விரட்டவும் இவர் அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது (தோபி 3:17). இவ்வாறு கடவுள் தாம் விரும்பும் தனது திட்டங்களை உரியவாறு நிறைவேற்ற காலத்திற்கும், நேரத்திற்கும் தகுந்தாற் போல் தூதர்களை அனுப்பி தனது செய்தியை வெளிப்படுத்தினார் என்பதே உண்மை. திருச்சபையும் இந்த உண்மையையே எமக்கு கற்றுத் தருகிறது. உலகின் அளவு கடந்த வளர்ச்சிப் போக்கால் கடவுள் நம்பிக்கை குறைந்து அனைத்தையும் விஞ்ஞான நோக்கில் சிந்திப்பது மனிதனின் சாதாரண இயல்பாகவுள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் எமது விசுவாசக் கண்களைத் திறந்து, இறைவனின் சந்நிதானத்தில் அமர்ந்திருந்து அவருடைய திட்டத்தை மனுகுலத்திற்கு வெளிப்படுத்தும் இறைத் தூதர்களைப் பற்றி சிந்தித்து, அவர்களுடைய உதவியிலூடாகவும், வேண்டுதல்களினூடாகவும் உடைந்து போன எமது விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்ப ஆயத்தமாவோம்.

## சிரிப்பு வந்தால் சிரியுங்க

அப்பா :- ஏண்டா இன்னைக்கி பள்ளிக்கூடம் போகலியா?

மகன் :- நான் போகலப்பா! ஏன்னா எனக்கு வாத்தியார் முட்டாள் தனமா கணக்குச் சொல்லித் தர்றார் நேத்து 'மூன்றும் மூன்றும் ஆறு' - என்றார், நேத்துநாள் 'நாலும் இரண்டும் ஆறு' ங்கிறார், எப்புடிப்பா இது. தப்புதப்பா சொல்றாருனே.

சிஸ்டர் :- மோட்சத்துக்கு வர யார் யாருக்கு இஷ்டம்? கை தூக்குங்க.

பையன்கள் :- எங்க எல்லாருக்கும் இஷ்டம் சிஸ்டர். (ஒரு பையன் மட்டும் தான் கை தூக்கல)

சிஸ்டர் :- ஏம்பா! உனக்கு மோட்சத்துக்கு போக இஷ்டமில்லையா?

பையன் :- இஷ்டம்தான் ஆனா எங்கம்மா கிளாஸ் முடிஞ்சவுடன் நேரா வீட்டுக்கு வரச் சொன்னாங்க. எங்கயும், யார் கூப்பிட்டாலும் போகக் கூடாதுன்னாங்க.

மகன் :- தாத்தா மீது நான் உயிரையே வச்சிருக்கேன்

அப்பா :- ஏன்டா?

மகன் :- ஏன்னா தாத்தா என்மீது உயிலையே வச்சிருக்கிறார்.

அப்பா :- ஏன்டா தம்பி ராத்திரில தூங்கும்போதுகூட கண்ணாடி போட்டுக்கிட்டு தூங்குற?

மகன் :- அப்பா! ராத்திரில வர்ற கனவு சரியா தெரிய மாட்டேங்குது அதனால் தான்.

## பொதுநிலையினர் தினம் 22.11.2009

I) சுவரொட்டி வரைதல் போட்டி :-

தலைப்பு :- "பங்கேற்கும் திருச்சபை" என்ற விடயத்தை காட்சிப்படுத்தும் ஒரு ஆக்கம்

வரைதாளின் அளவு :- A-3 size (45 cm x 35 cm)

* பிரிவு 1 - தரம் 10ல் இருந்து - தரம் 13 வரை வயதுக்குட்பட்டவர்கள்
* பிரிவு 2 - 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்

II) கட்டுரைப்போட்டி :-

தலைப்பு :- "திருச்சபையில் பொதுநிலையினர் பங்கு"

* பிரிவு 1 : 14 - 16 வயது (300 - 350 சொற்கள்)
* பிரிவு 2 : 17 வயதுக்கு மேற்பட்டோர் (450 - 500 சொற்கள்)

குறிப்பு * இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பங்குத்தந்தையுடன் தொடர்புகொண்டு அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பங்குபற்றிக்கொள்ளவும்.

* ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களுக்கு பங்கு / மறைக் கோட்டம் / மறைமாவட்டம் என்ற வகையில் பரிசில்கள் வழங்கப்படும்.

F. பிரான்சிஸ்
செயலாளர்
யாழ் மறை மாவட்ட பொ.நி.கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



# நாளைய தலைவர்களாகக் கூடிய இன்றைய இளைஞர்கள்

கத்தோலிக்க தேசிய இளைஞர் தினமான கடந்த 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை சுண்டிக்குளி புனித யுவானியார் மற்றும் புனித திரேசாள் ஆலய இளைஞர் யுவதிகளுக்கான ஒன்று கூடல் எமது பங்குத்தந்தை அருட்பணி. ஜெயறஞ்சன் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் திருவாளர் யோசப் பாலா அவர்களின் நெறிப்படுத்தலில் யாழ் தூய யோண் பொஸ்கோ பாடசாலை முன்றலில் இடம் பெற்றது. "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" எனும் மையக் கருத்தின் அடிப்படையில் இன்றைய இளைஞர்களுக்கு ஏற்படுகின்ற சவால்கள், எதிர்பார்ப்புக்கள் பற்றியும் இளைஞர்கள் திருச்சபைக்கு எவ்வாறு பணியாற்றலாம் என்பது தொடர்பிலும் பயனுள்ள கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

மேலும் இளையோராகிய எமக்கு நாங்களே தலைவர்கள் எனும் அடிப்படையில் எமக்கு ஏற்படும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் தலைமைத்துவப் பண்பினை இளைஞர்கள் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது. ஆலயங்களில் இளைஞர்களால் நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டங்களைப் பற்றித் தீர்மானம் எடுக்கப்பட்டது. பின்னர் எமது பங்குத்தந்தையால் எமது நுண்ணறிவை, விவேகத்தை அதிகரிக்கும் படியான போட்டி நிகழ்வு நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியாக நன்றியுரையுடனும், நன்றிச் செபத்துடனும் ஒன்று கூடல் இனிதே நிறைவுற்றது.

**கு. பப்ரிஸ்ரா நிமோஜினி.**

# திருவழிபாடு பற்றிய... (5ம் பக்கத் தொடர்ச்சி)

அவை விநோதமானதாக அமைந்து விடுகின்றன. எனவே வழிபாட்டுப் பாடல்களில் சுரங்கள் பாடுவதைத் தவிர்த்துக் கொள்வது வழிபாட்டுக்கு உதவியாக இருக்கும். அவ்வாறே மன்றாட்டுக்களையும் பாடலாக (இராகத்தோடு) மன்றாடுவதைத் தவிர்ப்பதும் சிறந்தது.

12. வழிபாட்டில் நடனங்களை இணைத்துக் கொள்வதாயின், வழிபாட்டின் <u>இயல்பு பாதிக்காத வகையிலும், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும்</u> இணைத்துக் கொள்ளலாம்.

13. வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பொருட்கள் வழிபாட்டுக்குரியவையாக இருக்க வேண்டும். அத்தோடு தூய்மையாக இருக்க வேண்டும். உ+ம். துணிகள், பாத்திரங்கள், இரசம், தண்ணீர் கொண்டு வரப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் போன்றன. நற்கருணைப் பாத்திரங்களுக்குப் பதிலாக (ciborium) எவர்சில்வர் கிண்ணங்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

14. ஞாயிறு திருப்பலிகளில் தூபமும், மன்னிப்புச் சடங்கின் இறுதியில் ஆசிநீரும் பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது.

15. காணிக்கை மீது மன்றாட்டின் போது இறைமக்கள் <u>எழுந்து நிற்கக</u> குரு ஊக்குவிக்க வேண்டும்.

16. கூட்டுத் திருப்பலிகளின் போது குருக்கள் <u>திருப்பலி ஆடைகள் (alb & stole) அணிய வேண்டும்</u>. அத்தோடு நற்கருணை ஆராதனையின் போது அல்லது சுருப ஆசீர்வாதத்தின் போது பீடத்துக்குச் செல்லும் குரு அதற்குரிய ஆடைகளை (surplice & stole) அணிய வேண்டும்.

இந்த தீர்மானங்கள் யாவும் 2009ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதை அறியத் தருகின்றேன்.

**நன்றி**

# சிப்பிக்குள் மறைந்த முத்தாக...

## செபமாலைக் கன்னியர் இறை அனுபவ சபை

செபமாலைக் கன்னியராக நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றால் அது இறைவனின் திருவுளம் என்றே சொல்லலாம். எம் மட்டில் இறைவன் ஆழ்ந்த அன்பும் கருணையும் காட்டுகின்றார். செபதபதியாகம் என்னும் போது எம் வாழ்வின் அர்த்தத்தை இன்னும் ஆழப்படுத்துகின்றது. அதாவது செபத்தினால் இறைவனுடன் நெருக்கமாக முடிகின்றது. இதை உய்த்துணர்ந்து செயற்படும் போது அது தபமாக மாறுகின்றது. அவைகளைப் பெற்ற நான் பிறருக்கு பகிர்ந்தளிக்கும் போது அது தியாகமாகின்றது.

செபமாலைக் கன்னியராக எம்மை அழைத்த இறைவன் தனியாக எம்மை விட்டுவிடாது ஒவ்வொரு கணப்பொழுதும் எம்மோடு தானும் ஒருவராக இருந்து பயணிப்பதை எமது நாளாந்த வாழ்வில் காண்கின்றோம். மீட்புப் பணிக்காகத் தன் மகனை அழைத்த தந்தையாம் இறைவன், பாவத்தளைகளில் இருந்து மனுக்குலத்தை விடுதலையாக்கும் பெரும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். இயேசு தந்தையின் அழைப்புக்குப் பதில் கொடுத்ததை மீட்பின் சின்னமாகிய சிலுவையில்க் காண்கின்றோம். அதுபோல் அன்னை மரியாளும் அழைக்கப்பட்டாள் அந்த உத்தமியும் "ஆண்டவரே நான் உமது அடிமை" என்று கூறி தனது அழைப்பை ஏற்றுக்கொண்டாள். இதனால் மீட்பரின் உடன்இரெட்சகி ஆனாள்.

எமது ஞானத்தந்தை தவத்திரு தோமஸ் அடிகளாரும் அழைக்கப்பட்டார். அவரும் "ஆண்டவரே நானோ ஒன்றும் இல்லாதவன்" எல்லாப் பாவத்திற்கும் மடமைக்குமே உரியவன் என்று தன்னை முழுதுமாகத் தாழ்த்தினார். அவரை இறைவன் தன்னுடைய பெரும் கருவியாகப் பயன்படுத்தினார். அது தான் இன்று யாழ் மண்ணின் இரகசிய முத்துக்கள்.

செபமாலைக் கன்னியர் என்று அழைக்கப்படும் எம்மையும் நம்பி இறைவன் சிறந்த பொறுப்பை ஒப்படைத்துள்ளார். நாம் சிப்பிக்குள் மறைந்திருந்து உலகிற்கு முத்துக்களாகத் திகழவேண்டும். அதாவது விலைமதிப்பிட முடியாத எமது செபதவ தியாக வாழ்வினால் நாம் நம் திருச்சபைத் தாயானவளுக்கு சிற்பிக்குள் முத்தாகவும், உடம்பின் இதயமாகவும், மரத்தின் அடியில் போடப்பட்ட உரமாகவும் வாழ்ந்து முழு உலகத்தையும் அப்பா தந்தையிடம் அழைத்துச் செல்ல இறைவன் எம்மை அழைக்கின்றார். எனவே நாம் "வருவோம் சுவைப்போம் தொடர்வோம் அழைத்தலின் மகிமையிலே"

**நவதுறவி**
**செபமாலைக் கன்னியர்மடம்**
**யாழ்ப்பாணம்.**

# கல்விப் பணியில் கரைந்து... (1ம் பக்கத் தொடர்ச்சி)

1975 - 1991 வரை 16 வருடங்கள் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் பணியாற்றினார். அவரிடம் அங்கு கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று குருக்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

1991 - 1995 வரை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராகபணியாற்றிப் பல மாணவர்களைக் கல்வி உலகில் உருவாக்கியமை குறிப்பிடத்தக்க பணியே. யாழ் கல்விச் சமூகம் இவருக்கு தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பணி நிறைவுக் காலம் முதல் 08.09.2009 அன்று தாம் இறக்கும் வரை, நோயின் பிடிக்குள் சிக்கித் தவித்திருந்தார். எனினும் அவரின் இறை நம்பிக்கையும், பணி வாழ்வில் காட்டிய அர்ப்பணமும் இறுதி வரை இவரோடு கூட இருந்தது ஓர் நிறைவு. இவர் இறைவனில் நித்திய அமைதி கொள்ள காவலன் பிரார்த்திக்கிறது.

(இவர் மன்னார் மறை மாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தையர்கள் யேசுராஜா, கிறிஸ்துநாயகம் ஆகியோரின் சகோதரியாவார்)

# பிரதான வீதியில் ஒரு தரமான கட்டடத் தொகுதி (புனித மடுத்தினார் வர்த்தக மையம்)

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள புனித மடுத்தினார் குருமட வளாகத்தின் ஒரு பகுதியில், ஒரு வர்த்தக மையக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு அண்மையில் யாழ் ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.






2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டிடப்பணியானது கால நெருக்கத்தின் விளைவால் தடைப்பட்டிருந்தது. தற்போது அது முழுமையடைந்திருக்கிறது. இது யாழ் திருச்சபையின் தேவைகள் சிலவற்றை பூர்த்தி செய்யும் ஒரு முயற்சியாகக் கொள்ளப்படுகிறது.

# நலன்புரி நிலைய கல்கத்தா வாருமே



கல்கத்தாவின்
வீதிகளெங்கும்
வறுமை விதிவரைந்த
மனித சாயல்களை
பொறுக்கி எடுத்த
புதுமைப் பெண்ணே,

காலாவதியான மனிதர்களின்
தாலாட்டும்
தொட்டிலாய் நின்ற
கரங்களைக் கொண்டவளே,

ஏழ்மைக்கும் வளமைக்கும்
நடந்த போரில் நெரிபட்டு
கலங்கிய விழிகளை
துடைத்த
வெரோணிக்காளே,

பணங்களுக்காக
ஓடும் உலகில்
ரணங்களைத் தேடி
போர்க்களம் சென்ற
தாயே

உன் நூறாவது
பிறந்த நாளில்
எங்கள்
நலன்புரி நிலைய கல்கத்தாவிற்கு
ஒரு முறை வருவாயா?

உணவின்றி
போதிய
உடையின்றி
உணர்வின்றிச் சுருக்கிய
மனிதத்தை
சற்று
தரிசிப்பாயா?

உனது கல்கத்தாவும்
இயேசுவின்
கொல்கொத்தாவும்
இங்கே
கதிர்காமர்
குமாரசாமி
அருணாச்சலங்களின்
பெயர்களில் ....

ஓ.......
உனது கூனல் விழுந்த
முதுகுடன்
முள்வேலிக்கு வெளியே
அது எப்படி சாத்தியமாகும்?

**- எஸ்.ஏ அருட்செல்வன் -**

# சிந்தனைத் தூறல்கள் - 01

## அப்துல் ரகுமானின் இது சிறகுகளின் நேரம்

### எல்லா நாளும் ஞாயிற்றுக்கிழமையே

"இன்று ஞாயிற்றுக்கிழமையாக இருக்கக் கூடாதா? வேலைக்குப் போகிறவர்களுடைய ஏக்கம் இது. ஞாயிற்றுக்கிழமை என்றால் விடுமுறை. விடுமுறை என்றால் வேலையிலிருந்து விடுதலை, ஓய்வு, மகிழ்ச்சி, கொண்டாட்டம்.

ஒன்றை மறந்துவிடுகிறோம். விடுமுறை என்பதே வேலை செய்பவர்களுக்கு தான்.

உண்மையில் விடுமுறை என்பது செய்த வேலைக்கான சம்பளம். விடுப்புக்களில் ஈட்டிய விடுப்பு (earned leave) என்று ஒன்று உண்டு. உண்மையில் விடுப்புக்கள் எல் லாமே ஈட்டிய விடுப்புக்கள் தாம்.

ஓய்வின் சுகம் வேலை செய்வதனால் தான் அனுபவிக்க முடியும். வெயிலில் வெந்தவனுக்குத் தான் நிழல் சுகமாக இருக்கும். நியாயமாக ஓய்வின் சுகத்தை அனுபவிப்பவன் வேலைக்கு நன்றி சொல்ல வேண்டும்.

எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டால் பெரும்பாலானோர் 'ஏதோ இருக்கிறோம்' என்று விரக்தியோடு பதில் சொல்கிறார்கள்.

காரணம் அவர்கள் பார்க்கும் வேலை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எந்த வேலை அவர்களுக்குச் சம்பளம் தருகிறதோ எந்த வேலை அவர்களுக்கு ஓய்வின் சுகத்தை தருகிறதோ அந்த வேலையை அவர்கள் வெறுக்கிறார்கள்.

இது நன்றி கெட்ட செய்கை. இரண்டு வழிதான் உண்டு. ஒன்று உங்களுக்கு விருப்பமான வேலையைத் தேடிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் நீங்கள் பார்க்கும் வேலையை விரும்ப தொடங்குங்கள். நீங்கள் விரும்பாததால் தான் நீங்கள் பார்க்கும் வேலை கசப்பாக இருக்கிறது. நீங்கள் பார்க்கும் வேலையை நீங்கள் விரும்ப தொடங்கிவிட்டால் அது இன்பமாக மாறி விடும்.

பிடிக்காத வேலையை எப்படி விரும்புவது?

**(தூறல் தொடரும்...)**

# வடமாகாணத்தில் சிறந்த... (1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து ஒருவிருதுமாக இருவிருதுகளை வழங்கி கல்லூரி அணியினரை கௌரவித்தனர்.

இதுவரை காலமும் மூன்றாம் பிரிவு அணியாக இருந்த இவ்வணி, இப்பொழுது இரண்டாம் பிரிவுக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. வடமாகாண பாடசாலைக் கிறிக்கெட் அணிகளுள் பத்திரிசிய கல்லூரி அணியே முதன் முதலாக 2ம் பிரிவு (Division Two Team) தரத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இனிவருகின்ற போட்டிகள் தென்னிலங்கையிலுள்ள 2ம் பிரிவு தர அணிகளுடனே நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமை[illegible] 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org